நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 02 திங்கட்கிழமை (16.05.2011) பக்கங்கள் 16 ஓசை – 229

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

(C/704)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530



'தற்கொலை' மிரட்டினார் பிரேமதாஸ

08



கண்டனம் கண்டனம் கண்டனம்

12

ஓய்வூதியம் 28 லட்சம்

05



பணிப்பெண் மீது பாலியல் பலாத்காரம்

13



## பொலிஸ் நடமாடும் சேவையில் நூற்றுக்கணக்கில் திரண்ட மக்கள்

(மானிப்பாய்)

இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைக்கு இணங்க மானிப்பாய் பொலிஸ் நிலையத்தினரால் நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மல்கம் பிரேமலால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அபய சிங்க மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வுக்கு வருகை தந்தவர் களுக்கு யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி ஐ.பி. சேனாதீர போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விளக்கமளித்தார். அதிகமான மாணவர்கள் போக்குவரத்து விளக்க வுரைகளைச் செவிமடுத்ததுடன், தமது சந்தேகங்களையும் கேட்டுத் தெரிந்து கொணடனர்.

வடவலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி மகாராணி இராசரத்தினம், காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பரம் சோதி, வலி.மேற்கு விவாகப் பதிவாளர் திருமதி சியாமளா இரத்தினசேகர், சண்டிலிப்பாய் பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டு விவாகப் பதிவு மேற் கொள்ளாது விவாகம் செய்த தம்பதியினருக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த அழிவுகளின் மதிப்பீடு; உலக வங்கி அதிகாரிகள் களத்தில்

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்குப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் யுத்த அழிவுகளை உலக வங்கி மதிப்பீடு செய்யவுள்ளது. பலாலி கூட்டுப்படைத் தலைமையக விஸ்தரிப்புக்காகவும் படை நடவடிக்கைகளின் போதும் வலி.வடக்கின் அநேகமான பகுதிகளில் இருந்து பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர். அத்துடன் அப்பகுதி முழுமையான யுத்தத்தின் காரணமாக அழிவடைந்து போனது.**

இவ்வாறான யுத்தப் பாதிப்புக்கள் தொடர்பான முழுமையான களநிலை மதிப்பீடு ஒன்றை உலக வங்கி தற்போது மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக உலக வங்கியின் உயர்மட்டக் குழு ஒன்று நாளைமறுதினம் யாழ்ப்பாணம் வருகிறது. இக்குழுவினர் வலி. வடக்குப் பகுதிக்கு நேரடியாகச் சென்று தமது மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர் என்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அத்துடன், வலி. வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்த உலக வங்கிக்குழு நேரடியாக ஆராய்ந்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளது.

அங்குள்ள வீடுகள், பாடசாலைகள், வீதிகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவற்றை (15 ஆம் பக்கம் பார்க்க)

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

## யாழில் இந்திய கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இந்தியக் கல்விக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நாளையும் நாளைமறுதினமும் யாழ். பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில், நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5 மணிவரையும் நாளைமறுதினம் காலை 9 மணி முதல் ஒரு மணிவரை இக்கண்காட்சி இடம் பெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பட்டதாரி மற்றும் முதுநிலைப் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் குடாக்கடலில் மூழ்கின இரு தீவுகள்!

(மன்னார்)

இந்தியா மற்றும் இலங்கைக் கிடையிலான மன்னார் குடாவில் அமைந்துள்ள இரண்டு சிறிய தீவுகள் கடலுக்குள் மூழ்கியுள்ளதாக பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆய்வொன்றை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

கடல் மாசடைதல் மற்றும் புவி வெப்பமடைதல் போன்றன காரணமாக கடல் நீரின் மட்டம் உயர்ந்து செல்வதனால் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுகின்றன.

மன்னார் குடாவில் சமுத்திர பூங்காவுக்கு உரித்தான 21 தீவுகள் அந்தப் பிராந்தியத்தில் அமைந்துள்ளன.

அந்தப் பிராந்தியம் உலகின் சமுத்திர உயிர்ப் பல்வகைமை அதிகமாக உள்ள பிராந்தியமாக (16 ஆம் பக்கம் பார்க்க)

## நாம் குறுகிய அரசியல் சுயலாபம் கருதிப் பேசுபவர்கள் அல்லர்

(வசாவிளான்)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்ற வலி. வடக்கில் மீள்குடியமர்ந்துள்ள பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் குறித்தும், அவற்றை நிறைவு செய்வது எப்படி என்பது குறித்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களுடன் கலந்துரையாடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.



இவ்வைபவத்தின் ஆரம்பத்தில் கல்லூரி அதிபர் கனகராஜா தனது உரையின்போது,

இப்பாடசாலையில் இன்று நாம் நின்று கொண்டிருப்பதற்கு காரணகர்த்தா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களே! அமைச்சர் அவர்களது கைங்கரியம் காரணமாகத்தான் எமது இந்தப் பாடசாலை இன்று எமக்குக் கிடைத்திருக்கிறது எனத் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நாமலின் செயலாளர் வீடு மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)

இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான நாமல் ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளரின் அம்பாந்தோட்டை இல்லத்தின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

ஆயினும் வீட்டில் இருந்த எவருக்கும் காயம் ஏற்பட்டு இருக்கவில்லை. வீட்டின் யன்னல் மாத்திரம் உடைந்து விட்டது.

தென் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். படைகளின் தளபதிக்கு நீண்ட ஆயுள் வேண்டும்

சங்கானையில் யாக பூசை





(சங்கானை)

இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் படையினர் ஆகியோருக்கு நீண்ட ஆயுள் வேண்டி சங்கானை ஸ்ரீ முருகன் கோவிலில் யாகம் ஒன்று நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிந்தியத் துறைமுகங்களால் இலங்கை பொருளாதாரத்திற்குப் பாதிப்பு

(கொழும்பு)

தென்னிந்தியப் பிராந்தியங்களில் காணப்படும் முக்கிய துறைமுகங்களை இந்திய அரசு நவீன முறையில் அபிவிருத்தி செய்துள்ளமையினால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தென்னிந்தியத் துறை முகங்களில் மேற் கொள்ளப்பட்டு வரும் நவீன அபிவிருத்தி நடவடிக்கைகள், இலங்கையுடனான ஏனைய நாடுகளின் கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டேன்டட் சாட்டட் வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

பூகோள ரீதியாக இலங்கையில் உள்ள துறைமுகங்கள் கிழக்கு மற்றும் மேற்கு கப்பல் வழிகளில் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள போதிலும் தென்னிந்தியத் துறை முகங்களினால் பாரிய போட்டியை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தவிர தென்னிந்தியாவில் உள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் வாழ்வியலின் அனைத்து விடயங்களிலும் அக்கறையாக உள்ளோம்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கொழும்பு)

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இயல்புச் சூழலைச் சரியாகப் பயன்படுத்தி அபிவிருத்தியை நோக்கிச் செல்லவேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பளை மத்திய கல்லூரியில் இடம் பெற்ற பச்சிலைப்பள்ளிப் பிரதேச மக்களுக்கான பிறப்பு, இறப்பு, தேசிய அடையாள அட்டை, காணி அனுமதிப் பத்திரம் மற்றும் வைத்திய சேவைகளுக்கான நடமாடும் சேவையினை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் சட்டதிட்டங்களுக்கு மதிப்பளித்து நடப்பதன் மூலம் நாம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். குறிப்பாக இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. எனவேதான் பொலிஸ், பொதுமக்கள் நல்லுறவு செயற்பாடுகளையும் ஒவ்வொரு பிரதேசங்களிலும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் மக்களின் அபிவிருத்திகளில் மட்டுமன்றி அவர்களின் வாழ்வியல் ரீதியில் அனைத்து விடயங்களிலும் நாம் அக்கறையோடு செயற்பட்டு வருகின்றோம்

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் முகுந்தன், கிளிநொச்சி மாவட்ட பொலிஸ அத்தியட்சகர் லக்ஸ்மன் பண்டார, பளைப் பிரதேச பொலிஸ் அதிகாரி பீரிஸ், பிரதேச இராணுவ அதிகாரி கேணல் யகம்பத் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மருத்துவர்கள் சிவனேசன், ஜெயராஜா ஆயுர் வேத வைத்தியர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பு அதிகாரி சாந்த மற்றும பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிங்கப்பூரின் ஸ்தாபகர் லீ குவான் யூ ஓய்வு

(கொழும்பு)

சிங்கப்பூர் அமைச்சரவையின் ஆலோசகராகப் பணியாற்றி வந்த சிங்கப்பூரின் ஸ்தாபகரும், முதலாவது பிரதமருமான லீ குவான் யூ பதவியில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார். மக்கள் நடவடிக்கை கட்சியின தலைவரான லீக்குவான யூ 1959ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை சிங்கப்பூரின் பிரதமராக பணியாற்றினார்.

தொடர்ச்சியாக சிங்கப்பூரில் இடம்பெற்ற 8 பொது தேர்தல்களிலும் வெற்றி பெற்று பிரதமராக கடமையாற்றிய அவர், பின்னர் அமைச்சரவையின் ஆலோசகராகப் பணியாற்றினார்.

தாம் அமைச்சரவை ஆலோசகர் பணியில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்த லீ குவான யூ, இதன் மூலம் திறமையான இளைய தலைமுறையினர் அரசியலில் பங்குகொள்ள முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், சிங்கப்பூரில் கடந்த வாரம் இடம்பெற்ற பொதுத்தேர்தலிலும், லீக் குவான் யூ வின் மக்கள் நடவடிக்கை கட்சியே வெற்றிபெற்று, அவருடைய புதல்வர் லீ சென் லியோன மீண்டும் பிரதமராக தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேதன உயர்வு கோரி கவனயீர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 ரூபா அடிப்படை வேதனம் வழங்கப்பட வேண்டும எனக் கோரி, நேற்று பிற்பகல் தலவாக்கலை நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த போராட்டத்தில் கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டிருந்தன.

இதன்போது வலியுறுத்தப்பட்ட விடயங்கள் குறித்த விபரங்களுடன் பெருந்தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர் வடிவேல் சுரேஷ் இணைந்து கொள்கிறார்.

இதேவேளை, ஜனாநாயக மக்கள் முன்னணியின் சார்பில் மத்திய மாகாணசபை உறுப்பினர் முரளிரகுநாதனனும், கலந்துகொண்டதாக அவர் தெரிவித்தார்.

# தேசிய விவசாயிகள் தின சிறப்பு ஏற்பாடு

(வவுனியா)

தேசிய விவசாயிகள் தினம் இம்முறை விவசாய மாவட்டமான வவுனியாவில் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்படவுள்ளது. யூலை மாதம் 20ஆம் திகதி முதல் தொடர்ந்து 5 தினங்களுக்கு விவசாயக் கண்காட்சி நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க தனித்தனியான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது என மாவட்ட விவசாய விரிவாக்கல் உதவிப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெகநாதன் தெரிவித்தார்.

நிகழ்வை விவசாய அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். (39)

# வீதி புனரமைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன ஆலய பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதிகள் யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் முள்ளியவளையிலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதிகள் தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (40)

# குளத்து நீர் பயன்பாடு சீராக்கப்படுவது எப்போது?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் ஊரியான் உபகுழுத் திட்டத்தின் கீழ் கழிவு நீரைப் பயன்படுத்தி விவசாயச் செய்கையில் ஈடுபட மேற்படி குழு அனுமதித்துள்ளதால், நீர்ப்பாசனக் காணிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் பாதிப்படைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திட்டத்தின் கீழ் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களைவிட கழிவு நிலங்களில் கழிவு நீரைப் பயன்படுத்தி கூடுதலான நிலப்பரப்பில் இப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஊரியான் உபகுழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனால் கழிவு நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் நீர்ப்பாசனக் காணிகளுக்கு வாய்க்கால்கள் ஊடாக வருகின்ற நீரை கழிவு வாய்க்கால்களில் விட்டு நீரைக் கொண்டு செல்கின்றனர்.

இதனால் நீர்ப்பாசனக் காணிகளில் செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகள் தமது பயிர் நிலங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதில் கூடுதலான காணிகளுக்கு நீர் பாய்ச்சமுடியாமல் பயிர்கள் கருகிய நிலையில் காணப்படுவதாகவும், அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து தமக்குச் சரியான முறையில் நீர்ப்பாசனக் காணிகளுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுதருமாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# வேலணையில் இன்று ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(வேலணை)

வேலணைப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்றைய தினம் காலை 9 மணியளவில் வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகப பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்கின்றார்.

மேற்படி இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீவகம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து விவசாயக் குழுக்களினது பிரதிநிதிகள், பிரதேச சபைகளினது உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், போக்குவரத்து மற்றும் வீதி அபிவிருத்தி ஆகியவற்றின் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், வர்த்தக நிலையங்களினது உரிமையாளர்கள் என பல்துறை சார்ந்தவர்கள் இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (05)

ஓரியண்டல் அக்கூரியம்
(மல்ரி பாம் சென்ரர்)
வளர்ப்பு கலர் மீன் வகைகள், நவீன வகையான மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்புக் குருவிகள், நாய்க்குட்டி இனங்கள், செல்லப் பிராணிகள், பூக்கன்றுகள், பூச்சாடிகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்பு :- மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல :- 0217912997, 0754985400, 0759880000
(C/727)

மாபெரும் சதுரங்கப் போட்டி
இடம் :- யாழ்.இந்துக் கல்லூரி
காலம் :- மே மாதம் 27, 28, 29ஆம் திகதிகள்
நேரம் :- தினமும் காலை 8.30 - மாலை 5.00 மணிவரை
கல்வி அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்திற்கேற்ப "இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கம்" முதன் முறையாக மேற்படி போட்டியினை யாழ்.மாவட்டப் பாடசாலைகளிற்கிடையே நடத்தவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்றவுள்ள சாவகச்சேரி இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி முதலான பாடசாலைகளிற்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.
இப் பாடசாலைகள் போட்டிக்கான பதிவுகளை யாழ்.இந்துக்கல்லூரியில் இந்த மாதம் 16ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் மேற்கொள்ளவும்.
மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.தயானந்தனுடன் 0776176465 இலக்கத் தொலைபேசியில் தொடர்புகொள்ளலாம்.
ஆ.பு.விமலவீரா, செயலாளர், இலங்கை பாடசாலைகள் சதுரங்கச் சங்கம், கொழும்பு.
(C/729)

பிறருடையதவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அது பற்றிப் பேசக் கூடாது. அப்படிச்செய்வதனால் நீங்கள் அவ னுக்கு கேடு செய்வதுடன் உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

- விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றதை அடுத்து கூட்டணிகளின் தலைவி செல்வி.ஜெயலிதா ஜெயராம் தமிழக முதல்வராக இன்று பதவியேற்கிறார். அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

தேர்தல் காலத்தில் அ.தி.மு.க. கூட்டணியும், தி.மு.க.கூட்டணியும் தமிழ்மக்களைக் கவரக்கூடிய வகையில் பல வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தன.

இரு அணிகளது வாக்குறுதிகளும் பெரும்பாலும் ஒன்றாகவே இருந்தபோதும், அ.தி.மு.க. கூட்டணியின் வாக்குறுதிகளில் சில தமிழக வாக்காளர்களைப் பெருமளவு கவர்ந்திழுத்ததன் பிரதிபலிப்பே அவர்களின் அமோக வெற்றியை உறுதிப்படுத்தியிருந்தது.

தேர்தலுக்கு முந்திய கருத்துக் கணிப்புக்களையும், அதற்குப் பிந்திய கருத்துக் கணிப்புக்களையும் பொய்ப்பித்து அ.தி.மு.க. கூட்டணியே எதிர்பார்த்திராத வகையில் பெரு வெற்றியைப் பெற்றுள்ள அதேவேளை, தி.மு.க.கூட்டணியும் சற்றும் எதிர்பாராத வகையில் படுதோல்வியைச் சந்தித்துள்ளது.

கருணாநிதி தலைமையிலான தி.மு.க.வின் ஆட்சிக் காலத்தில் தலைவிரித்தாடிய ஊழல் விவகாரங்கள், அத்தியாவசியப் பாவனைப் பொருட்களின் விலை உயர்வு, மின்வெட்டுக்கள் அவரின் தோல்விக்கு சிறு காரணமாக இருந்தாலும் அவரும், அவரது குடும்பத்தினரும் ஈடுபட்ட ஊழல் விவகாரங்களே முக்கிய காரணங்களாக இருந்து அ.தி.மு.க. கூட்டணிக்கு பெருவெற்றி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தமிழக மக்களைப் பொறுத்த வரையில் மௌனம் காத்து, அமைதி காத்து, தமது வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தி இமாலய சாதனை ஒன்றை நிலைநாட்டி விட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அ.தி.மு.க. கூட்டணியினர் தி.மு.க.கூட்டணி மீது குறிப்பாக கருணாநிதியின் குடும்பத்தவர்களின் ஊழல், அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பாக குற்றம் சுமத்தியுள்ள அதேவேளை, அ.தி.மு.க ஆட்சியின்போது இடம்பெற்ற ஊழல் விவகார வழக்குகளும் நீதிமன்றத்தில் உள்ளன.

இந்த வழக்குகள் தொடர்பில் முதல்வர் ஜெயலலிதா கையாளப்போகும் உத்திகள் உடனடியாக அவரிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது போனாலும், அவர் அளித்துள்ள வாக்குறுதிகளின் படி மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்சினையைப் பொறுத்த வரையில், தமிழ்மக்கள் சமஉரிமையும், சகவாழ்வும் பெற்று தலை நிமிர்ந்து வாழக்கூடிய நிலை உருவாகி வரும் தற்போதைய முயற்சிகளுக்கு பேராதரவு தரவேண்டும் என்றும் உங்கள் ஆதரவை எதிர்பார்த்து அதற்காகக் காத்து நிற்கிறோம் என்றும் அவருக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை காலத்தின் தேவை கருதிய வேண்டுதலாக உள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியின் இந்த அமோக வெற்றிக்கு இலங்கை தமிழ்மக்களின் பிரச்சினையும் ஒரு காரணமாக அமைந்துள்ளதாகக் கருதப்படுவதால், தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பில் தீவிர கவனம் செலுத்தி ஐக்கிய இலங்கைக்குள் கௌரவமாகவும், நிரந்தர அமைதி சமாதான சகவாழ்வுக்கு வழிவகுக்க வேண்டும்.

இதனை நீங்கள் நிச்சயமாக நிறைவேற்றி வைப்பீர்கள் என தமிழ்மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

- ஆசிரியர்.

# மக்களின் அடர்த்தியான வாழ்க்கை தொற்றுநோய்ப்பரவும் வேகம் அதிகரிப்பு

### எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு



(கொழும்பு)

கொழும்பு உட்பட மக்கள் நெருக்கமாக வாழும் பிரதேசங்களில் வாழும் மக்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் பலவிதமான நோய்களால் பாதிக்கப் பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வாழ்க்கை முறைமை, உணவு பழக்கவழக்கங்கள், மற்றும் சமூக நடத்தைகள் போன்றன காரணமாகவே, இந்த நோய்கள் ஏற்படுவதாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு நகரில் வசிக்கும் ஒவ்வொரு 10 பேரில் ஐவர் ஏதாவது நோயினால் பாதிப்படைந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தவிர, நீரிழிவு, புற்றுநோய், மனநல பாதிப்பு நோய்கள் போன்ற நோய் தாக்குதல்களுக்கு உள்ளாவதாகவும் அந்த அறிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக உடற் பயிற்சிகளில் ஈடுபடாமை, எண்ணெய் நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல், உடனடி சிற்றுண்டிகளுக்கு பழக்கப்படுதல், போதைப்பொருள் மற்றும் மதுபாவனைக்கு அடிமையாதல், போன்றவை, நோய்கள் அதிகரிப்பதற்கு மிகப் முக்கிய காரணிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, கிராமிய மட்டத்தில் பல்வேறு நோய்களுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 10 சதவீதமாக உயர்வடைந்துள்ளதாகவும் கண்டறியப் பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை 2025 ம் ஆண்டளவில் 50 சதவீதமாக அதிகரிக்கக் கூடிய அச்சுறுத்தல் நிலவுவதாகவும், எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரபால சிறிசேன இதுகுறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்த போது, இந்த நோய்கள் தொடர்பில் கண்டறிந்து அவற்றுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு 10 லட்சத்து தொளாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக சுகாதார அமைப்பும் நிதியுதவிகளை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குப்பைத் தொட்டியில் போடவேண்டிய மன்னிப்புச்சபையின் குற்றச்சாட்டுகள்



(கொழும்பு)

சர்வதேச மன்னிப்புச்சபை முன்வைத்துள்ள குற்றச் சாட்டுக்களை குப்பைத்தொட்டியில் தான் போடவேண்டும் என்று அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்துள்ளார்.


சர்வதேச மன்னிப்புச்சபையானது பணத்தை நோக்காகக் கொண்டு இயங்குகின்ற ஒரு நிறுவனம். அவர்களுடைய செயற்திட்டங்களுக்குப் நிதி வழங்குபவர்களின் தேவைக்கேற்பவே மன்னிப்புச் சபையின் அதிகாரிகள் செயற்படுவார்கள் என்றும் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் இடம்பெற்றுவருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியுள்ளது. கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்று கூடலுக்கான சுதந்திரம் என்பன மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் கைதிகள் பலர் குற்றச்சாட்டுக்களின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இவ்வருடத்துக்கான ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் அதனைக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மேளத்திற்குள் அம்மன் சிலை யாழ்ப்பாண வாசி பிடிபட்டார்



(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்திற்கு, மேள வாத்தியத்திற்குள் அம்மன் சிலையை கடத்தி கொண்டு வந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரை கடந்த புதன் கிழமை திருக்கோவில் பொலிசார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் கோப்பாய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடையவராவார்.

குறித்த சந்தேக நபரின் மேள வாத்தியத்தினுள்ளிருந்து வென்கலத்திலான ஒன்றரையடி உயரமான அம்மன் சிலை மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.பி.சமிந்த எதிர சூரிய தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை திருக்கோவில் சிறி சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு மேளவாத்தியத்துடன் வந்திருந்த ஒருவர் தான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ளதாகத் தெரிவித்து தங்கியிருந்தார்.

சம்பவ தினமான புதன்கிழமை தனது மேளவாத்தியங்களை ஆலயத்தினுள் வைத்து விட்டு வெளியே சென்றவர் நீண்ட நேரமாகியும் திரும்பாததை அடுத்து சந்தேகம் கொண்ட ஆலய நிருவாகிகள் அவருடைய மேள வாத்தியத்தினைத் தூக்கிப் பார்த்துள்ளனர்.

மேளம் சாதாரண பாரத்தைவிட கனமாகக் காணப்பட்டதனால் சந்தேகங் கொண்டு திருக்கோயில் பொலிசாருக்கு அறிவித்தனர். உடனடியாக ஆலயத்திற்கு வந்த பொலிசார் மேளத்தினை சோதனையிட்டனர்.

இதன்போது மேளத்தினுள் இருந்து ஒன்றரை அடி உயரமான வெண்கலத்திலான அம்மன் சிலை ஒன்றை பொலிசார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று முன்தினம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றி?ல் ஆஜர்படுத்திய போது, நீதிபதி ரி.சரவணராஜா இவரை எதிர்வரும் 24ஆம் .திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மனைவி இறந்ததாகக் கூறி பணம் பெற்றுவந்த கணவன் கைது

உயிருடன் உள்ள மனைவியை இறந்துவிட்டதாகக்கூறி மரண அறிவித்தல் துண்டுப்பிரசுரத்தைக் காட்டி கணவர் பணம பெற்று வந்த சம்பவமொன்று இரத்தின புரியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவருக்கு 3 மாத சிறைத்தண்டனையும், ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த நபரின் மனைவிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக செலுத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள வலதுர, யஹல கொட்டுன்னே பகுதியில் வசிக்கும் ஏ.ஜி.விஜித மற்றும் ரேணுகா ஆகிய இருவரே மேற்படி சம்பவத்துடன் தொடர்புடையவர்களாவர்.

மனைவி பணிபுரிந்த ஆடைத்தொழிற்சாலையிலிருந்து பணம் பறிக்கும் நோக்கிலேயே குறித்த நபர் மனைவி இறந்துவிட்டதாகக் கூறி மரண அறிவித்தல் பத்திரத்தை அச்சிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.



# வியாபார நிலையங்களில் மது விற்பனை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் மாமுனை முதல் ஆழியவளை வரையுள்ள பல்வேறு வியாபார நிலையங்களில் சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறத.

இந்த விற்பனை நடவடிக்கைகள் கூடுதலாக இரவுவேளைகளில் இடம்பெற்றுவருவதாகவும் இதனால் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்ய வரும் நுகர்வோரை கடைக்காரர்பொருட்படுத்தாமல் இந்த விற்பனையில் அதிகம் ஈடுபடுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

சில வியாபார நிலையங்களில் சாராயம் விற்பனை செய்வதற்காகவே சில பலசரக்கு பொருட்களை கடையில்வைத்து விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட இவ்வாறு வியாபார நிலையங்களில் இடம்பெறும் இந்த விற்பனை நடவடிக்கையினால் இளைஞர்கள் தவறான வழியில் செல்வதாகவும் இளம் சமூதாயம் பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி மககள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மதுவரித்திணைக்களத்துடன், தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேசத்திலுள்ள புத்துஜீவிகள் பொது அமைப்புக்களின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கை விடுக்கின்றனர். (38)

# பெற்ற மகளையே தலைகீழாக தூக்கி அடித்து தாக்கிய தந்தை

(கரணவாய்)

மதுபோதையில் தனது பெற்ற மகளை தலைகீழாக தூக்கி அடித்துள்ள சம்பவம் ஒன்று நெல்லியடி கலிகை சந்திப்பகுதியிலுள்ள வேம்படி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த பிள்ளை தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளதாகவும் இது தொடர்பாக அப்பிள்ளையின் தாயார் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து நெல்லியடி பொலிஸார் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு குறித்த நபரை கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவின்படி எதிர்வரும் 20 ஆம் திகதி தடுப்புக் காவலில் வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(18)

# துருப்பிடிக்கும் உழவுயந்திரங்களை உரியவர்களிடம் வழங்கக் கோரிக்கை



பூநகரி கமநலசேவை அலுவவலர் எல்லையில் இயங்கிவருகின்ற 19 கமக்கார அமைப்புக்களுக்கும், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதற்காக கமநலசேவை உதவி ஆணையாளர் ஊடாக வழங்கப்பட்ட நான்கு சில்லுஉழவு இயந்திரங்களும், உதிரிப்பாகங்களும் தகுந்த முறையில் பாதுகாக்கப்படாமல் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக மழையிலும், வெய்யிலிலும், துருப்பிடிக்கும் நிலை ஏற்படுவதாகப் பூநகரி விவசாயிகள் கவலை தெரிவிப்பதுடன், உடன் இவ் இயந்திரங்களை உரிய அமைப்புக் களுக்கு வழங்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (112)

# சிவபூமி முதியோர் இல்லத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு விழா

(வலிகாமம்)

சுழிபுரம் வழக்கம் பரையில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்ல 4ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை செவ்வாய் காலை 9 மணிக்கு, வழங்கம் பரையிலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு, பிரதமவிருந்தினராகப் போராசிரியர் அ. சண்முகதாஸ் திருமதி கலாநிதி மனோன்மனணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் வரவேற்புரையினை சங்கானை கற்றன் தேசிய வங்கி முகாமையாளர் ம.தயாகர, ஆசியுரையினை, நல்லையாதீன முதல்வர் வழங்கம்பரை அம்மன் கோவில் அர்ச்சகர் சிவஸ்ரீ சு. சுந்தரராஜ குருக்கள் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

விழாவில், சிவபூமிப் பாடசாலை மாணவர்களது குழு நடனம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, மாணவிகளின் நடனம், போராசிரியர் நந்தியின் சிங்கப்பூர் டாக்டர் நாடகம், துர்க்காபுரம் மகளிர் இல்லமாணவிகளின் இசை நாடகம், முலான கலை நிகழ்வுகளும்,நடைபெறவுள்ளன. (06)

# மானிய விலையில் வழங்கப்படும் நீர் இறைக்கும் இயந்திரங்கள்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தினால் 50 வீத மானியத்திட்டத்தின் கீழ் இதுவரை 400 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் இயந்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு ஆயிரத்து 900 பேர் விண்ணப்பித்துள்ளனர்.'இந்த நிலையில் இதுவரை 750 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதில் 400 நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்கள நிர்வாகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விண்ணப்பித்த 1900 பேரில் 1700 பேர் மட்டுமே சிபார்சு செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 200 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அதன்பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (110)

# ஆசிரிய ஆலோசகருக்கு இன்று சேவை நயப்பு விழா

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், குறித்த கல்வி வலயத்தில் விஞ்ஞான பாடசேவைக் கால ஆசிரிய ஆலோசகராக 20 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் பொ. நாகரத்தினத்திற்கு சேவை நயப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விஞ்ஞான ஆசிரியர் சங்க தலைவர் சி. கணேசகுமார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜேந்திரன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு. சுந்தரசிவம், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், தெல்லிப்பளை கோட்டக்கலிவிப் பணிப்பாளர் ச. கைலசநாதன், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் தி.கந்தசாமி, சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.துரைஎங்கரசு, மற்றும் விஞ்ஞான பாட உத்விக்கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திரசர்மா ஆகியோர் கலந்து கொண்டுநயப்புரை நிகழ்த்தவுள்ளனர். (06)




சாவகச்சேரி நகர்மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினால் உலகமகளிர் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியமாதர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வில் யாழ். மாவட்ட வாழ்வாதார சம்மேளன உதவிப்பணிப்பாளர் ரவிகரன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதனை காணலாம். (11)

# சின்னஞ் சிறு செய்திகள்

## பாடசாலை வளாகத்தில் சிரமதானப்பணிகள்

(அச்சுவேலி)

அண்மை நாட்களாக பெய்துவந்த மழையினைத் தொடர்ந்து அச்சுவேலி, ஆவரங்களால், புத்தூர், சிறுப்பிட்டிபிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தல் களுக்கமைய சிரமதானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய பாடசாலை வளவுகளினுள் காணப்படும் குப்பை கூழங்கள் அகற்றப்படுவதுடன், சுற்றாடலில் உள்ள புற்கள் மற்றும் சிறு பற்றைகள் போன்றன வெட்டி அழிக்கப்படுகின்றன. நீர் தேங்கக் கூடியதென இனங்காணப்பட்ட இடங்கள் தீர் தேங்காதவாறு மட்டப்படுத்தும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன இதே வேளை டெங்கு பற்றிய விழிப்புணர்வை மாணவர் மத்தியில் உருவாக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. (03)

## கருத்தரங்கும், செயலமர்வும்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில், தரம் 10,11 வகுப்புக்களில் விவசாயமும் உணவுத்தொழில்நுட்பவியலும், கற்பிக்கும் ஆசிரியர்களிற்கான கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி செயலமர்வு எதிர்வரும் 18ஆம் திகதி மானிப்பாய் ஆசிரிய வளநிலையத்தில் காலை 8. மணிமுதல், மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது செயலமர்வுக்கு வருகை தருவதற்கு ஆவண செய்யுமாறு ஆதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (06)

## மத்தியஸ்த சபைகள் அமைக்க நடவடிக்கை

(கோப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள காரைநகர் மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மத்தியஸ்தசபைகள் அமைப்பதற்கு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச்சபைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது. (08)

## திருப்பலிப் பூசை

(கரணவாய்)

செம்பியன்பற்று புனித திருநெறியார் ஆலய திருப்பலிப் பூசைகள் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அடியார்கள் இவ் ஆலயத்திற்கு செல்வதற்கு ஏற்ற வகையில் பருத்தித்துறையிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் காலை 6 மணிமுதல் போக்குவரத்து சேவைகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

## தபால் அதிபர் தரம் 11 மூன்று பேர் தெரிவு

தபால் திணைக்களத்தினால் தபால் சிற்றூழியர்களுக்கிடையே நடத்தப்பட்ட தபால் அதிபர் தரம் 11க்கு தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் மூலம் யாழ். மாவட்டத்திலிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பிரமத தபாலகத்தைச் சேர்ந்த தெ.வேவளவேந்தன் கே. ஈஸ்வரன் எஸ். சயந்தன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவார். (08)

## மது போதையில் அடாவடித்தனம்

(வடமராட்சி)

வடமராட்சி அல்வாய் வடக்குப் பகுதியில் சில இளைஞர்கள் மதுபோதையால் வீதிகளில் அட்டகாசம் புரிவதாக அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அல்வாய் நாவலடிச் சந்திக்கும் முத்துமாரி அம்மன் ஆலய வீதிக்கும் இடையில் மதுப்பிரியர்கள் இரவு வேளைகளில் குழுவாகச் சென்று மதுவை அருந்திவிட்டு வீதியில் நின்று பயணம் செய்பவர்களிடம் அடாவடித்தனத்தில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால், அப்பகுதி குடியிருப்பாளர்கள், தாம் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். (100)



## புதிய நிர்வாகிகள்

(பூநகரி)

பூநகரி மட்டுவில்நாடு கிழக்கு கமக்கார அமைப்பின் பொதுச்சபைக்கூட்டம் பூநகரி கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் என். சுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக பொன். தில்லைநாதனும், உபதலைவராக நா. குணசேகரமும், செயலாளராக செ. யசுதரனும், உப செயலாளராக செ. டேவிட்டும், பொருளாளராக ஆ. பாலகிருஸ்ணனும், நிர்வாக உறுப்பினர்களாக செ. துரைசிங்கம், வி. கனகரத்தினம், இ. தர்மலிங்கம், செ. விநாயகமூர்த்தி, எஸ். பத்மா, சு. சிவகுமார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (112)

கிளிநொச்சியிலிருந்து ஸ்கந்தபுரத்திற்கு செல்லும் புதுமுறிப்பு பிரதான பாலம் அண்மையில் பெய்த மழையை அடுத்து கடுமையாகச் சேதமடைந்திருந்தது. பின்னர் இப்பாலம் தற்காலிகமாகத் திருத்தப்பட்டு போக்குவரத்து இடம்பெற்ற நிலையில், அண்மையில் வீட்டுத் திட்டத்திற்குப் பொருட்களை ஏற்றிச் சென்ற வாகனம், பாலம் சேதமடைந்திருக்கும் காரணத்தால், பாலத்திற்குள் வீழ்ந்து கிடப்பதனைக் காணலாம். (29)

### பனை, தென்னைவள சமாசம்

# அங்கத்தவர்களுக்கு மாத ஓய்வூதியமாக 28 இலட்சம் ரூபாவினை வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியமாக சுமார் 28 இலட்சம் ரூபாவை ஓய்வூதியமாக வழங்கி வருவதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

2006ஆம் ஆண்டு முதல் சமாசத்தினால் அறிமுகப்புடுத்தப்பட்ட இந்த ஓய்வூதியத்திட்டத்தின் மூலம் சுமார் 300இற்கும் அதிகமான அங்கத்தவர்கள் மாதந்தோறும் பயன்பெற்று வருகினறார்கள்.

சமாசத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள சங்கங்களின் அங்கத்தவர்களாக இணைந்துள்ளவர்கள், 60 வயதைப் பூர்த்தியடைந்ததும் இந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களாகவர்.

60 வயதைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அவர்கள் தொழில் செய்யும் காலத்தில் வழங்கும் நிதிப் பங்களிப்பைக் கொண்டே வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கத்தவர்களின் நலன் கருதி நடைமுறைப்படுத்தி வரும் இந்த ஓய்வூதியத்திட்டத்தைவிட அவர்கள் தொழிலில் ஈடுபடும்போது விபத்துக்களில் சிக்க நேரிட்டால் விபத்து நிதித்திட்டம் ஒன்றும் ஆரம் பிக்கப்பட்டு அந்நிதியின் மூலம் விபத்து ஏற்படும் காலங்களில் விபத்து நிதி வழங்கும் திட்டத்தையும் சமாசம் அமுல் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏனைய கூட்டுறவு நிறுவுனங்களுக்கும் முன்னுதாரணமாக இந்த ஓய்வூதியத் திட்டத்தை முன்னாள் அரச அதிபர் க. கணேஷ், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி இ. விக்கினராசா, யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் ஆகியோர் பாராட்டியுள்ளதாகவும் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

## முன்பள்ளிக்கட்டட திறப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை செந்தமிழ் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும், உடுத்துறை இராணுவப் பொறுப்பதிகாரி, வடமராட்சி கிழக்கு சிவில் அதிகாரி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக உடுத்துறை, ஆழியவளை, மருதங்கேணி ஆகிய கிராம சேவையாளர்கள், JRS நிறுவனத்தைச் சேர்ந்த எட்டின் அடிகளார் மற்றும் போரூட் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (38)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(16.05.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

வைகாசி 02 ஆம் நாள்.

நட்சத்திரம் : சுவாதி மு.இரவு 8.41 வரை

திதி: சதுர்த்தசி மு.இரவு 7.35 வரை

ராகுகாலம் : 7.23–8.53

சுபநேரம் : 11.53–1.23

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– தேகசுகம், பண வரவு, நல்லசேதி, மூத்தோர் ஆசி.

ரிஷபம்:– காரிய சித்தி, மன நிம்மதி, பொருள் வரவு, வீண் அலைச்சல்.

மிதுனம் :– சோம்பல், காரியத் தடை, மன உளைச்சல், வீண் பயம், கவலை.

கடகம்:– பொருள் இழப்பு, மனக்குழப்பம், வீண் அலைச்சல், விபத்து, பணக்கஷ்டம்.

சிம்மம்:– சோர்வு, தேகநலக் குறைவு, கவலை, பண வரவு.

கன்னி :– தானதர்ம சிந்தனை, பெரியோர ஆசி, பண வரவு, பதவியுயர்வு, மன நிம்மதி.

துலாம் :– மனச்சஞ்சலம், வீண் அலைச்சல், பணக் கஷ்டம், கவலை, விபத்து வரும், அபாயம்.

விருச்சிகம்:– பண வரவு, மன நிம்மதி, அரசபயம், மூத்தோர் ஆசி.

தனுசு:– பணக் கஷ்டம், காரியத் தடை, கவலை, தேக சுகக் குறைவு.

மகரம்:– மனச்சோர்வு, வீண் பயம், பண வரவு, கவலை.

கும்பம் :– மன நிம்மதி, பணக்கஷ்டம், பெரியோர் ஆசி, பயண சுகம்,

மீனம்:– பண வரவு, மனச்சஞ்சலம், வீண் அலைச்சல், விபத்து வரும் கவனம்.

## நிவாரணம் வழங்குமாறு மீனவர்கள் கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் மீன்கள் கிடைப்பதில்லை என அப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். கடந்த ஒரு மாத காலமாக கடலுக்குத் தொழிலுக்குச் சென்றபோதிலும் மீன்கள் எவையும் இல்லாத நிலையில் திரும்பி வந்ததாகவும், இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமராட்சியில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் இதனால் ஜீவனோபாயத்தை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு ஏற்பட்டுள்ள தொழில் பாதிப்பை கருத்தில் கொண்டு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## வாகன நெரிசலினால் விபத்து ஏற்படும் அபாயம்

(குருநகர்)

யாழ். நகர மரக்கறிச் சந்தையின் வெளிப்பகுதியில் பழக் கடைகள் புதிதாக அமைக்கப்பட்டுப் பழ விநியோக நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதால், ஆஸ்பத்திரி வீதியில் தற்போது போக்குவரத்துக்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இதனால் சத்திரச்சந்திக்கும் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி மிகுந்த நெருக்கடி ஏற்படுவதால் வீதியால் வாகனங்கள் செல்வதில் அசௌகரியம் ஏற்பட்டு வருகிறது.

ஆஸ்பத்திரி வீதியின் மிகவும் ஒடுங்கிய அப்பகுதியில் கடைகளின் வியாபார விநியோகச் செயற்பாடுகளும், ஆரம்பிக்கப்பட் டுள்ளதால் தென்பகுதி உல்லாசப் பயணிகள் கடைகளைச் சூழ்ந்து குழுமி நிற்கையில் வாகன நெரிசல்களால் விபத்துகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை மேற்படி கடைகளின் வியாபாரச் செயற்பாடுகளை மரக்கறிச் சந்தையின் உள்பக்கமாகச் செயற்படுத்துவதன் மூலம், நெருக்கடி நிலையை அகற்றுமாறு அவ்விடத்தைப் பயன்படுத்தும் சகல தரப்பினரும் கோரிக்கை விடுக்கின்றனர். (68)

# நிதி ஒதுக்கீடு செய்தபோதிலும் கட்டடம் அமைக்கப்படவில்லை

**மக்கள் விசனம் தெரிவிப்பு**

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொதுச்சந்தைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வோரும் நுகர்வோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தினால் பாதிப்படைந்த இப்பகுதியில் மக்கள் மீள்குடியேறியுள்ள போதிலும் சந்தைக்கான கட்டடம் இல்லாமல் சிலர் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும், நிலத்தில் வைத்து விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் புதிதாக சந்தைக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டபோதிலும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இச்சந்தைக் கட்டடத்தை விரைவில் அமைத்துத் தருமாறு நுகர்வோரும், வியாபாரிகளும் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## இரதோற்சவம்

(வடமராட்சி)

துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீ சுப்பிரமணிய ஆலய இரதோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (100)

## வெசாக் புத்தபூர்ணிமா விசேட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வெசாக் புத்தபூர்ணிமா தினத்தை முன்னிட்டு யாழ். சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க்கிழமை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 8.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மேலும் நண்பகல் காயத்திரி மந்திரம், பஜனை என்பன இடம்பெற்றுப் "புத்தரின் போதனைகள்" எனும் விடயம் பற்றி மக்கள் வங்கியின் ஓய்வு பெற்ற பிரதி முகாமையாளர் இ. சிறீஸ்கந்தராஜா சிறப்புச் சொற்பொழிவு அற்றவுள்ளார்.

# ஜெயலலிதாவிற்கு ஏன் இந்த பெரு வெற்றி?



> அ.தி.மு.க வெற்றிக்கு தமிழக அரசியலில் மூன்றாவது வாக்குப்பலம் உள்ளவராக வர்ணிக்கப்பட்ட விஜயகாந்த் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு காரணமாயிருந்தாலும், ஜெயலலிதாவுக்கு இந்தப் பெருவெற்றியை வழங்கியவர்கள் கருணாநிதியும் அவரது குடும்பத்தினருமே என்பதை இன்று சிறுபிள்ளை கூடச் சொல்லிவிடும். சரியாகத் தேர்தல் சமயத்தில் வந்துவிழுந்த 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல், ஆ.ராசா மற்றும் கருணாநிதியின் மனைவி, மகள் மீதான சி.பி.ஐ குற்றப்பத்திரங்களெல்லாம் தி.மு.க.வினருக்கே அதிர்ச்சியையும் சோர்வையும் ஏற்படுத்தியதாக அமைந்துவிட்டது.

## வெரு.விநாயகமூர்த்தி

தமிழகத் தேர்தலில் ஜெயலலிதாவின் அ.தி.மு.க கூட்டணி, அவர்களே எதிர்பார்த்திராத பெருவெற்றியைப் பெற்றிருக்கிறது. கருணாநிதியின் தி.மு.க கூட்டணி, அவர்கள் மட்டுமல்ல கருத்துக் கணிப்பாளர்களும் எதிர்பார்த்திராத பெருந்தோல்வியில் வீழ்ந்திருக்கிறது. அதாவது எதிர்க்கட்சியாகக் கூட இருக்க முடியாத வரலாற்றுத் தோல்வி.

அ.தி.மு.க வெற்றிக்கு தமிழக அரசியலில் மூன்றாவது வாக்குப்பலம் உள்ளவராக வர்ணிக்கப்பட்ட விஜயகாந்த் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டு காரணமாயிருந்தாலும், ஜெயலலிதாவுக்கு இந்தப் பெருவெற்றியை வழங்கியவர்கள் கருணாநிதியும் அவரது குடும்பத்தினருமே என்பதை இன்று சிறுபிள்ளை கூடச் சொல்லிவிடும். சரியாக தேர்தல் சமயத்தில் வந்துவிழுந்த 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல், ஆ.ராசா மற்றும் கருணாநிதியின் மனைவி, மகள் மீதான சி.பி.ஐ. குற்றப்பத்திரங்களெல்லாம் திமுகவினருக்கே அதிர்ச்சியையும் சோர்வையும் ஏற்படுத்தியதாக அமைந்துவிட்டது.

அதுமட்டுமல்லாது அரச நடவடிக்கைகளிலும் சினிமா, தொலைக்காட்சி கேபிள் தொழிலிலும் கருணாநிதி குடும்பத்தினரின் ஆதிக்கம் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துமளவுக்கு அடாவடியாக இருந்தது. ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் கூட அவரது உற்ற தோழியும் வளர்ப்பு மகனும் தான் அதிகார நிழலில் சொல்லும்படி இருந்தார்கள். ஆனால் கருணாநிதி ஆட்சியில் மூத்த மனைவி, இளைய மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் என்று ஒரு பெரிய குடும்பப் பட்டாளமே அட்டகாச ஆட்சி செய்தது.

தென்தமிழகம் மு.க.அழகிரிக்கும், வடதமிழகம் மு.க.ஸ்டாலினுக்கும், டெல்லி மகள் கனிமொழி மற்றும் மருமகன் தயாநிதி மாறன் ஆகியோருக்குமாக பங்குபோட்டுக் கொண்டார்கள். சென்னையில் துணைவியார் ராஜாத்தி அம்மாளும் அதிகார மையமாக இருந்தார். சினிமாத்துறையில் மருமக்களான மாறன் சகோதரர்களின் சன் பிக்ஸர்ஸ், பேரர்களான உதயநிதி ஸ்டாலினின், ரெட் ஜயன்ட் மூவீஸ், தயாநிதி அழகிரியின் கிளவுட் நைன் மூவீஸ் மற்றும் கடைசி மகன் தமிழரசு, பேரன் குணநிதி ஆகியோரின் தயாரிப்பு நிறுவனங்களை மீறி யாரும் செயற்பட முடியாதிருந்தது. மற்றவர்கள் படம் தயாரிப்பதையும் வெளியிடுவதையும் கூட இவர்களே முடிவு செய்தார்கள். நடிகர்களையும் மிரட்டி நடிக்க வைத்தார்கள்.

நடிகர் விஜயை உதயநிதி வீட்டுக்கு அழைத்து தந்தை முன்னிலையிலேயே மிரட்டி குருவியில் நடிக்க வைத்ததாக சொல்லப்படுகிறது. பின்னர் தயாநிதி அழகிரியும் அழகிரி தொண்டர்களும் 'காவலன்' படத்தை வெளியிட விடாமல் தடுத்ததில், விஜயும் அவர் தந்தை சந்திரசேகரும் ஜெயலலிதாவைப் போய்ச் சந்திக்கும்படி ஆனது. இப்போது தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, நான் நினைத்தது நடந்ததில் மிக மிக மகிழ்ச்சி என்று பூரிப்போடு சொல்லியிருக்கிறார் விஜய்.

கருணாநிதி குடும்பத்தார் நடிகர்களை மிரட்டி விழாக்களுக்கு அழைப்பதாக மேடையில் கருணாநிதி முன்னிலையிலேயே நடிகர் அஜித் வருத்தமுடன் பேசினார். அவரை ரஜினிகாந்தும் உணர்ச்சிகரமான முறையில் ஆதரித்துப் பேசினார். அதன்பிறகு ரசிகர்களால் இருதுருவங்களாகக் கருதப்படும் அஜித்தும் விஜயும் சந்தித்து மனக்குமுறலை நெருக்கமாகப் பரிமாறிக் கொண்டார்கள்.

கருணாநிதியைப் போற்றிப் புகழ்பாடும் விழாக்களை எடுக்கவும் கட்டாயமாகக் கலந்துகொள்ளவும் திரைத்துறையினர் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதை ஒழுங்குபடுத்தவும் திரைத்துறை சம்பந்தப்பட்ட மிரட்டல் அறிக்கைகளை விடவுமென இராம நாராயணன், அமிர்தம், குகநாதன் என்று ஒரு குழுவே முழுநேரமாகச் செயற்பட்டது.

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச மருத்துவ காப்பீடு, இலவச அம்புலன்ஸ், இலவச கலர் டிவி, இலவச 'காஸ்' அடுப்பு, இலவச கொங்கிரீட் வீடு என்று எவ்வளவோ இலவசங்களை வழங்கியபோதும் தொடர்ந்து மின்வெட்டு, விலைவாசி உயர்வு, ஊழல் என்பன அவற்றையெல்லாம் மறக்கடிக்கச் செய்துவிட்டது. இலவசங்கள், பண அன்பளிப்புகளுக்கு மேலாக நல்லாட்சி பற்றியே மக்கள் சிந்திப்பார்கள் என்பதை இப்போது பதவிக்கு வரும் ஜெயலலிதாவும் முன்பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே தேர்தல் தீர்ப்பு.


ஊழல், குடும்ப ஆதிக்கம், அடாவடி ஆட்சி என்பனவே திமுகவின் இந்தப் பெருவீழ்ச்சிக்குக் காரணமாகிவிட்டது என்பதில் சந்தேகமில்லை. இந்தக் களேபரத்திலேயே காங்கிரஸிம் அடி வாங்கியிருக்கிறது. எப்போதும் ஏதோ ஒரு கட்சியின் தோளிலேறியே சில தொகுதிகளை வெல்லும் காங்கிரஸ் இம்முறை கால்கள் வெட்டுப்பட்ட தாதாவின் தோளிலேறி வீழ்ந்து விட்டது. ஈழத் தமிழ் இனத்தைக் கொன்று குவித்த காங்கிரசுக்கு தமிழக மக்கள் பதிலடி கொடுத்து விட்டார்கள் என்று சீமான் பெருமிதத்துடன் முழங்கியிருப்பதை யாரும் சீரியஸாக எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஈழப்பிரச்சினை தமிழகத்தில் உணர்ச்சிகரமாகப் பார்க்கப்படுமே தவிர எந்தக் காலத்திலும் அது அங்கு தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. கடந்த தேர்தலில் ஈழப்பிரச்சினையைப் பெரிதாய்த் தூக்கித் தோல்வி கண்ட ஜெயலலிதா இம்முறை அடக்கியே வாசித்தார். வைகோ, ராமதாஸ், திருமாவளவன் போன்ற ஈழப் பிரச்சினை அரசியலாளர்களை ஒதுக்கிவிட்டு, கருணாநிதியின் ஊழல், குடும்ப ஆட்சி போன்றவற்றையே தன் வெற்றிக்கு நம்பினார். பா.ம.க, விடுதலைச் சிறுத்தைகள் எல்லாம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டிருப்பதும் இதையே உறுதி செய்கிறது. மேலும், ஜெயலலிதாவால் கைவிடப்பட்ட வை.கோபாலசாமியும், தமிழக மக்கள் பணநாயகத்தை வீழ்த்தி ஜனநாயகத்துக்கு மகுடம் சூட்டியுள்ளனர் என்றுதான் பெருமைப்பட்டிருக்கிறாரே தவிர, வழக்கமாய்ச் செய்வது போல் கருணாநிதி தோல்வியையும் ஈழப்பிரச்சினையையும் சம்பந்தப்படுத்தவில்லை.

வழக்கமாக வெற்றி பெறும் கட்சியிலேயே சவாரி செய்யும் பாமக, இம்முறை அ.தி.மு.க விடம் அதிக தொகுதிகளைக் கேட்டுக் கிடைக்காததால் தி.மு.க.வுடன் சேர்ந்தது. இதுவே தமிழினக் கூட்டணி என்றும் இந்தக் கூட்டணி 234 இடங்களையும் கைப்பற்றும் என்றும் வழக்கம்போல சேர்ந்த பக்கத்துக்கு அல்லது விழுந்த பக்கத்திற்குரிய குறியை அழுத்தமாகவே இழுத்தார். ஆனாலும் சாதி ரீதியாகப் பலம் பெற்றிருந்த மூன்று தொகுதிகளையே மருத்துவர் ராமதாஸால் பெறமுடிந்தது. பா.ம.க. இருக்கிற அணியே எப்போதும் வெற்றிக்கூட்டணி என்று பேசிவந்த ராமதாசுக்கு இது பலத்த அடி. கடந்த தேர்தலில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்டு 18 இடங்களைப் பெற்ற பா.ம.க. இம்முறை மூன்று எம்.எல்.ஏக்களுடன் முடங்கிவிட்டது.

இது போலவே திருமாவளவனும் தமிழுணர்வாளர்கள் எல்லாம் தன் பக்கமே என்று முழங்கி 20 தொகுதிகள் கேட்டுக் கிடைத்த பத்திலும் இனமானத் தமிழர்கள் வெல்ல வைப்பார்கள் என்று நம்பி வழக்கம்போல ஈழப்பிரச்சினையை மேடைகளில் முழங்கினார். ஓர் இடத்தில் கூட வெற்றி பெற முடியாமல் அவரை முற்றாகத் துடைத்திருக்கிறார்கள் தமிழக மக்கள். கடந்த முறை அ.தி.மு.க கூட்டணியில் போட்டியிட்டு 2 எம்.எல்.ஏக்களைப் பெற்ற சிறுத்தைகள் இம்முறை விழுந்தது வெற்றுக் குழியில்.

இதற்கு மாறாக, இம்முறை அ.தி.மு.க கூட்டணியில் 41 தொகுதிகளில் போட்டியிட்ட விஜயகாந்தின் தே.மு.தி.க. 28 இடங்களிலும், 12 தொகுதிகளில் போட்டியிட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 10 இலும், 10 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் 9 இடங்களிலும், நடிகர் சரத்குமாரின் மக்கள் சமத்துவக் கட்சி போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும், டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகம் போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலுமாக அமோக வெற்றியை அறுவடை செய்துள்ளனர்.



தமிழக அரசியலில் இனி வேறு சமன்பாடுகள் உருவாவதை நாம் ஊகிக்கலாம். பாடகர்கள் மாறுவர். சுருதி மாறும். அதே பாடல்கள் நிகழ்ச்சித் தலைப்பில் மட்டும் மாற்றத்துடன் ஒலிக்க விடப்படுவதை நாம் கேட்கலாம். விஜயகாந்தின் மேலுள்ள கோபத்திற்காக தி.மு.க.மேடைகளில் வசைபாடிய வைகைப் புயல் வடிவேலு இனி அம்மா புகழ் பாடியபடி அங்கே சென்று விடுவார். அதை இப்போதே ஊகிப்பதில் சிரமமில்லை. விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவராக அமரப்போவதாக அறிவித்துவிட்டதால் வடிவேலுக்கு அதற்குத்தடை இருக்காது. சிங்கமுத்து குறுக்கே வராமலிருக்க வேண்டும் அவ்வளவுதான். அம்மாவிடமிருந்து தி.மு.க.வுக்கு அவசரப்பட்டு வந்த குஷ்புவும் தன்னை மறுபரிசீலனை செய்யக் காரணம் ஏதும் கிடைக்காமல் போகாது. இது தி.மு.க.வுககுத் தோல்வி அல்ல மக்களுக்கே தோல்வி என்ற அவரது இப்போதைய விசுவாசமான கண்டுபிடிப்பும் மாறிவிடக் கூடும். மக்கள் எனக்கு ஓய்வளித்துள்ளனர் என்று தோல்வியும் மகிழ்ச்சியே என்று காட்டத்தெரிந்த கருணாநிதிக்கும் தமிழக அரசியலுக்கும் அதிர்ச்சியாக எதுவுமே இராது என்பது மட்டும் உறுதி.

கடந்த ஆட்சியின் படுதோல்விக்கான காரணங்களிலிருந்து ஜெயலலிதா பாடங்கற்றுக்கொண்டிருந்தால் மட்டும், அதை அடுத்த ஐந்து வருடங் களுக்கு மறக்காமலும் இருந்தால் மட்டும் தமிழக மக்கள் சிறிதேனும் பாக்கியம் பெற்றவர்களாகக் கூடும்.

☆ ☆ ☆

# சூதாட்டத்தில் ஈடுபட்ட நடுவரும் பிடிபட்டார்



நடுவரும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரருமான அக்ரம் ராஸா தற்போது நடைபெற்றுவரும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டார். அவருடன் சூதாட்டத் தரகர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர்.

குல்பெர்க் லிபர்டி பகுதியில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் இருந்து ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அக்ரம் ராஸா என அடையாளம் காணப்பட்டுள்ளது என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.பி.எல். குறித்து பெட்டிங் எனப்படும் சூதாட்டத்தில் சிலர் ஈடுபட்டிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பொலிஸார் அந்தப் பகுதியில் சோதனை நடத்தினர் என அவர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ரொக்கப் பணம், தொலைபேசிகள் மற்றும் ஏராளமான இந்திய தொலைபேசி எண்கள் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக மேலும் விசாரணை நடைபெற்று வருவதாகவும், விசாரணைக்குப் பின்னர் அந்த ஏழு பேர் மீதும் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அக்ரம் ராஸா பாகிஸ்தானுக்காக 9 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 49 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி உள்ளார். தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முதல்நிலை நடுவர்கள் குழுவில் உள்ளார்.

# பாகிஸ்தானுக்கு இலக்கு 219

(காயானா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற 219 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி கடந்த 12ஆம் திகதி காயானா மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்சிங்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்சிங்காக களமிறங்கிய பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், 66 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்சிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, சயிட் அஜ்மலின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் அதன் இரண்டாவது இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்தர்போல் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பிசோ 24, சிமென்ஸ் 21 ஓட்டங்களைப் பெற்றனர். இரண்டாவது இனிங்சிலும் மிகச் சிறப்பாக பந்து வீசிய சயிட் அஜ்மல் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்நிலையில், 219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது மூன்று விக்கெட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் 34, அசாட் சபீக் 40 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தனர். பந்து வீச்சில் ராம்போல் இரண்டு, றோச் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தனர். ஏழு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில், பாகிஸ்தான் அணி இன்னும் 139 ஓட்டங்களை வெற்றிக்காக பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மட்டப் போட்டி

(முரசுமோட்டை)

வவுனியா வடக்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த வாரம் ஆரம்பமாகி நடைபெற்று வரும் இப்போட்டிகள் வவுனியா வடக்கு கல்விக் கோட்டத்தில் பல்வேறு பாடசாலைகளில் நடைபெற்று வருவதுடன் இதன் ஒரு கட்டமாக ஊர்சுற்றும் வீதியோட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை புளியங்குளம் இந்துக் கல்லூரி முன்றலில் ஆரம்பமாகியது.

இதில் குறித்த கல்விக் கோட்டத்திற்குட்பட்ட கனகராயன்குளம் மகாவித்தியாலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி, ஓமந்தை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 75இற்கு மேற்பட்ட மாணவர்கள் போட்டியில் பங்குபற்றினர். (110)




## மாவட்ட மட்ட போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 19 வயது பிரிவு எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் முதலாமிடத்தைப் பெற்று மாவட்ட சம்பியனாகியது.

இதில் ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றதுடன் பெண்கள் பிரிவில் இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையும், மூன்றாமிடத்தை மணற்காடு றோ.க. வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (100)





மானிப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், மெமோறியல் ஆங்கில பாடசாலைக்கும் இடையே நேற்றைய தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி மல்கம்பிளேட் கேடயத்தினை வழங்குவதையும் இரண்டு பாடசாலை வீரர்களும் அவருடன் நிற்பதனையும் காணலாம். (கா)

# யுனைட்டட் சம்பியன்



(லண்டன்)

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சம்பிய னாகியுள்ளது. இந்த இறுதிப் போட்டி நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. பிளக்பர்ன் றோவர்ஸ் கழகத்துடனான போட்டியில் மன்செஸ்டர் யுனைடெட் கழகம் 1-1 விகிதத்தில் சமநிலையில் முடித்துக் கொண்டது.

இதன் மூலம் இவ்வருட பிரிமியர் லீக் சம்பியன் கிண்ணத்தை வெல்வதற்குத் தேவையான புள்ளிகளை மன்செஸ்டர் யுனைடெட் கழகம் பெற்றுக்கொண்டது.

19 ஆவது தடவையாக இக்கிண்ணத்தை வென்றதன் மூலம் இங்கிலாந்து பிரிமியர் லீக் வரலாற்றில் மன்செஸ்டர் யுனைடெட் கழகம் புதிய சாதனை படைத்துள்ளது. இதுவரை லிவர்பூல் கழகம் 18 தடவை வென்றமையே சாதனையாக இருந்தது. போட்டியின் 73 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைடெட் அணியின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி அடித்த கோல் மன்செஸ்டர் யுனைடெட் அணியை சாதனை படைக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பாராட்டு விழா 31 இல்

(மும்பை)

உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினருக்குப் பாராட்டு விழா எதிர்வரும் 31ஆம் திகதி மும்பையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


கடந்த மாதம் நடந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, இலங்கையை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது. உலகக் கிண்ணப் போட்டி முடிந்த ஒருசில தினங்களில் ஐ.பி.எல்.போட்டி தொடங்கியதால், உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியினருக்குப் பாராட்டு விழா நடத்தப்படவில்லை.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வருகிற 28ஆம் திகதி முடிவடைகிறது. இதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் சபையின் ஆண்டு விருது வழங்கும் விழா மும்பையில் எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் 2009-10ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரர் விருது டெண்டுல்கருக்கு வழங்கப்படுகிறது. வாழ்நாள் சாதனையாளர் விருது யாருக்கு என்பது வருகிற 27ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. 2009ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2010 செப்டம்பர் 30ஆம் திகதி வரை நடந்த சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளில் சிறந்து விளங்கிய வீரர்-வீராங்கனைகளும் இந்த விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர.

இந்தநிகழ்வின்போது பல நிகழ்ச்சிகளையும் நடாத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாகவும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிய வருகிறது. இதேவேளை, 1983ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய அணியில் இடம்பெற்ற முன்னாள் வீரர்களுக்கு மேற்படி நிகழ்வில் கலந்துகொள்வதற்கான அழைப்பு விடுக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நடால் வெற்றி



இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் வெற்றிபெற்றார். இதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாடும் தகுதியையும் அவர் பெற்றார். இந்த ஆட்டத்தில் நடால் 7-5, 6-1 என்ற நேர் செட்களில் பிரான்ஸின் ரிச்சர்டு காஸ்கட்டை வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

# நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கையால் அழுத்தம் இருந்தாலும் அச்சப்படத்தேவையில்லை

## என்கிறார் அமைச்சர் பீரிஸ்



**(கொழும்பு)**

**ஐ.நாவின் நிபுணர்குழு வெளியிட்ட அறிக்கையினால் சில அழுத்தங்களை எதிர் கொள்ள நேரிட்டாலும், அதன் மூலம் பாரிய பாதிப்புகள் ஏற்படுமென அச்சப்படத் தேவை யில்லையென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நிபுணர் குழு அறிக்கை மற்றும் அது தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள எதிர் நடவடிக்கைகள் தொடர்பில் சிங்கள வார இறுதிப் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


நிபுணர் குழு அறிக்கையின் காரணமாக நாங்கள் சில அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஒரு சவாலை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அதனை நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. அதேநேரம் அதன் மூலம் பாரியளவான பாதிப்புகள் ஏற்படும் என்று அச்சப்படத் தேவையுமில்லை.

இதன்போது நாங்கள் இறுதிகட்டப் போரில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் உண்மைகளை வெளியுலகுக்கு விளக்கமளிக்க வேண்டும். பொய் கூறுவதாலோ, விடயங்களைத் திரித்துக் கூறுவதாலோ எங்களுக்கு சாதகமான முடிவுகள் கிட்டப் போவதில்லை.

உண்மை நிலவரத்தை எடுத்துக் கூறினால் இலங்கை எதிர்கொள்ள நோர்ந்திருக்கும் சவால்கள் இலகுவில் முறியடிக்கக் கூடியதாக மாறிவிடும் என்றும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையானது, இலங்கை எதிர்கொள்ள நேர்ந்திருக்கும் ஒரு சவாலாகும். அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அனைத்துத் துறைகளிலும் அழுத்தம் கொடுக்க அந்நிய சக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன

## பிரதியமைச்சர் நந்திமித்ர குற்றச்சாட்டு




(கொழும்பு)

அந்நிய ஏகாதிபத்திய சகதிகள் நாட்டின் அனைத துத் துறைகளிலும் அழுத் தங்களைப் பிரயோகித்து, தமக்கு அடிபணிய வைக்க முயற்சிப்பதாக உயர்கல்விப் பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ் கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் அந்நிய சக்திகளின் தலையீடு மற்றும் சதிநடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சில வெளிநாட்டுச் சக்திகள் நாட்டின் சகல துறைகளிலும் அழுத்தங்களைப் பிர யோகிப்பதற்கான அடித்தளங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். தமக்கு இசைவாக வளைந்து கொடுக்கக் கூடிய நபர்களை அவர்கள் தேடிக் கொண்டுள்ளனர். பல்கலைக்கழக விரிவுரை யாளர்களினால் நடத்தப்பட்டு வரும் போராட்டங்களும் அவ்வாறான அந்நிய சக்திகளின் ஒரு சதித்திட்டமே. சில அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய பல் கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டின் பல்கலைக்கழக அமைப்பைச் சீர்குலைப்பதற்கு முனைவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விரிவுரையாளர் தொழிற்சங்க நடவடிக்கை பல்.கலை செயற்பாடுகளைப் பாதிக்கவில்லை

## உயர் கல்வி அமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளினால் பல்கலைக்கழகங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எவ்வித இடையூறும் ஏற்படவில்லையென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

விரிவுரையாளர்களில் 40 வீதமானோர் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலகியுள்ளனர்

எனினும் நிர்வாக நடவடிக்கைகளிலிருந்து விலகியுள்ளனர். சில விரிவுரையாளர்கள் மீண்டும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

குறிப்பாக ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, நிருவாக பீடங்கள் தொடரந்தும் இயங்குவதாக கூறிய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆயுர்வேத பீடத்தில் விலகிய அனைவரும் தத்தமது பொறுப்புகளை மீள ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன், தென் கிழக்கு, ஊவா, மற்றும் சப்ரகமுவ ஆகிய பல்கலைக்கழககங்கள் முற்று முழுதாக இயங்கி வருகின்றன.

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சீர்குலைக்கும் வகையில் விரிவுரையாளர்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

# தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவிஏற்பு இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை

## லக்பிம கூறுகிறது

(கொழும்பு)

ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக பதவி ஏற்பதனால் இலங்கைக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படப்போவதில்லை என லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த சில காலமாக அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரான ஜெயலலிதா ஜெயராம் இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

எனினும், முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என அரசியல் விமர்சகர் மொஹான் சமரநாயக்க லக்பிம பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

தமிழகத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஜெயலலிதா இவ்வாறு இலங்கைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் மத்திய அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டிய நிர்பந்தம் ஜெயலலிதாவிற்கு ஏற்படும்.

எனினும் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெசாக்கின் பின்னர் அறிவிப்பு

(கொழும்பு)

பஸ் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக வெசாக் தினத்தின் பின்னர் போக்குவரத்து அமைச்சர் சி.பி.ரட்னாயக்க உத்தியோகபூர்வ அறிவிப்பொன்றை விடுப்பார் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அங்கீகாரமின்றியும் தம்மால் கட்டணத்தை அதிகரிக்க முடியும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் கூறியமை குறித்து கருத்து தெரிவிக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மறுத்துள்ளது. இது தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதில்லை என போக்குவரத்து அதிகாரிகள் ஏகமனதாக தீர்மானித்துள்ளதாக இந்த ஆணைக் குழுவின் தலைவர் வேல்கம கூறினார்.

# இந்தியப் படையினரை திருப்பி அழைக்காவிடின் தற்கொலை செய்வதாக மிரட்டிய பிரேமதாச

## இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இந்திய அமைதிகாப்புப் படையினர் நிறுத்தத் தவறினால், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிறேமதாச இந்தியாவை மிரட்டினார் என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் லெகான் மெஹ்ரோத்ரா தகவல் வெளியிட்டுள்ளார்.

'இலங்கையில் எனது நாட்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள நூல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இந்திய அமைதிகாப்புப் படையினர் 1989 ஜுலை 29 ஆம் நாளுக்கு முன்னதாக நிறுத்தத் தவறினால், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக இந்தியாவை மிரட்டியிருந்தார்.

இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியின் சிறப்புத் தூதுவர் பி.டி.தேஸ்முக் மூலமே இந்த அச்சுறுத்தலை பிறேமதாச விடுத்திருந்தார்.

இந்தியப் பிரதமரின் செய்தி ஒன்றை வழங்குவதற்காக தேஸ்முக் இலங்கை வந்திருந்த போதே பிறேமதாச இவ்வாறு கூறி மிரட்டினார். அப்போது தானும் அருகில் இருந் தாக லெகான் மெஹ்ரோத்ரா குறிப்பிட்டுள்ளார். இந்த நூல் தற்போது இலங்கையிலும் விற்பனைக்கு வந்துள்ளது.

254 பக்கங்களைக் கொண்ட இந்த நூலில் வேறும் பல முக்கிய தகவல்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள இந்திய அமைதிப்படையை ஆக்கிரமிப்புப் படை என்று பிரகடனம் செய்யப் போவதாகவும் பிறேமதாச மிரட்டியதாக இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் தனது கோரிக்கையை இந்தியா நிறைவேற்றத் தவறினால் புதுடில்லியில் உள்ள இலங்கை தூதுவரைத் திருப்பி அழைப்பேன் என்றும், தன்னை புதுடில்லிக்கு திருப்பி அனுப்புவேன் என்றும் பிறேமதாச மிரட்டியதாகவும் லெகான் மெஹ்ரோத்ரா குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தாகவும், இந்தியாவுக்கு எதிரான மோதல் போக்கு வலுப்பெற்று வந்ததை அடுத்து, ஒன்பது நாட்களுக்கு முன்னர் இந்திய அமைதிப் படையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டதாகவும் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது.

இரு நாட்டுப் படைகளுக்கும் இடையில் மோதல் உருவாகும் நிலை ஏற்பட்டிருந்ததாகவும், அவர் கூறியுள்ளார்.

வடக்கு,கிழக்கில் இந்தியப் படைகளுக்கும இலங்கைப் படையினருக்கும் இடையில் சிறியளவிலான மோதல்கள் ஏற்பட்டால், சவப்பெட்டிகளை கொழும்புக்கு கொண்டு வந்து, உணர்ச்சி மயப்படுத்தி இந்திய அமைதிப் படையினரை ஆக்கிரமிப்புப் படை என்று பிரகடனம் செய்ய இலங்கை ஜனாதிபதி பிறேமதாச திட்டமிட்டிருந்தாகவும் தனது நூலில் மெஹ்ரோத்ரா குறிப்பிட்டுள்ளார்.

30. சிவபாலனுக்கு எவ்வளவு புத்திமதி கூறியும் மது குடிக்கும் பழக்கத்தை அவனால் விட முடியவில்லை.
   1. ஆற்றினுள் விறகு வெட்டிப் போட்டதைப் போன்று
   2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாததைப் போன்று
   3. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதைப் போன்று

31. தாசன் என்பவன் சரியான கஞ்சன். அவனிடம் இருந்து ஏதாவது பொருளைப் பெறுவது மிகக் கடினமாகும்.
   1. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதைப் போன்று
   2. ஆற்றிலே போட்டாலும் அளந்துபோடு என்பதைப் போன்று
   3. ஆமையிடமிருந்து இறக்கை கேட்பதைப் போன்று

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

32. சுகத் என்பவன் 16 ரொபிகளை வாங்கி அவற்றில் 3/4 பகுதியைச் சாப்பிட்டு முடித்தான் எனின், அவனிடம் மீதியாக எத்தனை ரொபிகள் இருக்கும்?
   1. 12 2. 8 3. 4

33. என்னிடமிருந்து ரம்புட்டான் பழங்களில் அரைவாசியைச் சாப்பிட்டு முடித்த பின்னர் மீதியாக 4 ரம்புட்டான்கள் என்னிடமிருந்தது எனின், ஆரம்பத்தில் என்னிடமிருந்த ரம்புட்டான்கள் எத்தனை?
   1. 2 2. 4 3. 8

34. ஒருவர் தான் பயணம் செய்ய வேண்டிய தூரத்தின் 1/8 பகுதியை நடந்து சென்றார். அவர் நடந்து சென்ற தூரம் 2 km எனின், அவர் பயணம் செய்ய வேண்டிய மொத்தத் தூரம்.
   1. 4 km 2. 8 km 3. 16 km

**கீழே முதலில் தரப்பட்டுள்ள வாக்கியத்தின் அதே கருத்தைத் தரக்கூடிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

35. கிழக்கில் சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
   1. சூரியன் உதிக்கும்போது ரோஜாப்பூ சிரிக்கின்றது
   2. சூரியன் உதிப்பது ரோஜா மலர்வதேற்கே
   3. சூரியன் உதிக்கும்போது ரோஜா மலர்கின்றது

36. பொங்கிவரும் நீரோடை மனதைக் கவர்கின்றது.
   1. நீர் பொங்கி வருவதால் அது உடலுக்கு இதமானது
   2. நீர் பொங்கி ஓடிவரும்போது அது மனதைக் கவர்கின்றது
   3. ஓடும் நீர் எப்பொழுதும் மனதைக் கவரும் வகையிலேயே பொங்கி வரும்

**50 பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற சித்திரப் போட்டி ஒன்றில் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவ, மாணவிகளினது எண்ணிக்கையைப் பற்றிய அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அத் தகவல்களைக் கொண்டு அதன் கீழ்க் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

20 பாடசாலைகளுக்கிடையே அவ்விடங்கள் கிடைக்கப்பெற்ற ஒழுங்கு
பெண் - ஆண் - ஆண் - ஆண்
30 பாடசாலைகளுக்கிடையே அவ்விடங்கள் கிடைக்கப்பெற்ற ஒழுங்கு
பெண் - பெண் - ஆண் - பெண்

37. 30 பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற போட்டியில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?
   1. ஆண் 2. பெண் 3. கூறமுடியாது

38. 50 பாடசாலைகளிலும் 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்ட பெண்களினதும், ஆண்களினதும் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் என்ன?
   1. 10 2. 20 3. 30

39. 50 பாடசாலைகளிலும் 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட ஆண்களின் மொத்த எண்ணிக்கை என்ன?
   1. 30 2. 40 3. 70

40. 50 பாடசாலைகளிலும் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?
   1. 200 பேர் 2. 120 பேர் 3. 80 பேர்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I
நேரம் -45 நிமிடம்

# கல்வி முரசு


வெளியீடு 14



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**


**கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதல் உருவில் காட்டப்பட்டிருப்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய உருவைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்து தெரிந்து, அதன் கீழ் கோடிடுக.**

01.




(1) (2) (3) (4)

02.



(1) (2) (3) (4)

03.




(1) (2) (3) (4)

**கீழே 4ஆம், 5ஆம், 6ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள வாக்கியமானது உண்மையானது எனக்கொண்டு அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றில் மிகவும் சரியான கூற்றைத் தெரிவுசெய்து கோடிடுக.**

04. எல்லாப் பிராணிகளும் வாலை ஆட்டும். நாயும் ஒரு பிராணி எனவே,
   1. நாயும் வாலை ஆட்டும் 2. நாய்களின் வால் வளைந்து காணப்படும்
   3. சில நாய்கள் வாலை ஆட்டாது

05. அமலையும் விடக் கமல் கறுப்பானவன். கமலையும் விட அனில் கறுப்பானவன் எனின்,
   1. அமலையும் விட அனில் கறுப்பானவன் 2. அனிலையும் விடக் கமல் கறுப்பானவன்
   3. மூவரிலும் கறுப்பானவன் கமல்

06. குணபாலின் வலதுகைப் பக்கமாகச் சுமன் இருக்கின்றான். சுமனின் வலதுகைப் பக்கமாக முத்து இருக்கிறான் எனின்,
   1. நடுவில் இருப்பது முத்து 2. நடுவில் இருப்பது குணபாலன்
   3. நடுவில் இருப்பது சுமன்

**கீழே தரப்பட்டுள்ள கவிதைப் பகுதியை வாசித்து 7ஆம், 8ஆம் வினாக்களுக்குரிய பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

என் தங்கையின் கன்னம் போல
அழகான இந்தப் பூ
முத்தம் கொடுப்பதற்கு யாரினதும்
மனது கலங்காது.

07. இக்கவிதையில் சொல்லப்பட்டிருப்பது,
   1. தங்கையின் கன்னத்தைப் பற்றி 2. வாசனை, நிறம் கொண்ட பூவைப் பற்றி
   3. அழகான மலரைப் பற்றி



08. இக்கவிதையிலுள்ள உவமைச் சொல் ஒன்று
   1. பூ 2. கன்னம் 3. முத்தம்

**தரப்பட்டுள்ள தகவல்களுக்கமையக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான உருவப் படத்தைத் தெரிவு செய்து கோடிடுக.**

09.  என்பது 'குளிர்' எனும் சொல்லைக் குறித்தால் 'சூடு' எனும் சொல்லைக் குறிக்கப் பயன்படுவது?

1)  2)  3) 

10.  என்பது 'இளைஞன்' எனும் சொல்லைக் குறித்தால் 'வாலிபன்' என்பதைக் குறிப்பிடக் கூடியது?

1)  2)  3) 

11.  என்பது கள்ளனைக் குறித்தால் கள்ளியைக் குறிப்பது.


1)  2)  3) 


**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


12. கடல் ஆமை முட்டையிடுவது
    1. ஆழமான கடலினுள்
    2. கடற்கரையில் அமைந்துள்ள மரப் பொந்துகளினுள்
    3. கடற்கரை மணலினுள்

13. பறவைகளிடமிருந்து றம்புட்டான் பழங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் செய்யக்கூடியது.
    1. பறவைகளைக் கல்லால் அடித்தல்
    2. தகரப் பேணியில் கற்களைப் போட்டு அடித்தல்
    3. பழங்களுக்குக் கிருமிநாசினி தெளித்தல்


**14 தொடக்கம் 18 வரை தரப்பட்டுள்ள வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள படமானது அதற்கெதிரே தரப்பட்டுள்ள விடைகளில் எதனுடன் மிக நெருங்கிய கருத்துத் தொடர்பைக் கொண்டுள்ளது என்பதையறிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

14. 
    1. ஆண், பெண், கலவன் பாடசாலை
    2. தொழிற்சாலை
    3. வீடு

15. 
    1. உலகம், நல்லது, கெட்டது
    2. நாடு, மனிதர்கள், முதியவர்கள்
    3. தோட்டம், தாவரம், இலைகள்

16. 
    1. பெரிய மரம், இலைகள்
    2. வீடு, அறைகள்
    3. சங்கீதம், ராகம்

17. 
    1. உறவினர்கள், சின்னம்மா, மாமி, பாட்டி
    2. குடும்பம், அப்பா, அம்மா, மகன்
    3. கடல், கங்கை, குளம், ஆறு

18. 
    1. நாடு, மாகாணம், பிரதேசம், கிராமம்
    2. கை, பெருவிரல், நடுவிரல், சிறுவிரல்
    3. கங்கை, தண்ணீர், மணல், மீன், தாவரம்



19. மகன் ஒருவன் எப்பொழுதும் தனது தாயையும் விட
    1. அறிவில் குறைந்தவனாக இருப்பான்
    2. வயதில் குறைந்தவனாக இருப்பான்
    3. உயரத்தில் கூடியவனாக இருப்பான்

20. முத்து ஒன்று எப்பொழுதும்
    1. மின்னிக் கொண்டேயிருக்கும்
    2. பற்பல நிறங்களில் காணப்படும்
    3. பெறுமதி கூடியதாக இருக்கும்

**21ஆம், 22ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்க.**


21. | பசி: உணவு | எனின் | நோய்:........................................ |

1. வைத்தியர் 2. மருந்து 3. ஓய்வு


22. | வெளிச்சம்:நிழல் | எனின் | ....................................வெள்ளம் |

1. மழை 2. உதவி 3. படகு

23. உணவு, சிற்றுண்டி, லட்டு என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இதில் A இனால் காட்டப்படுவது யாது?
    1. உணவு
    2. சிற்றுண்டி
    3. லட்டு




24. காய்கறி, பழங்கள், கொய்யப்பழம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினைக் காட்டுவதற்குப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது. இந்த உருவில் காய்கறிகளைக் காட்டும் எழுத்து யாது?
    1. X
    2. Y
    3. Z




**பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

25. ஆற்றில் எப்பொழுதும் இருப்பது
    1. கரை 2. தண்ணீர் 3. மீன்

26. தொலைக்காட்சி ஒன்றில் எப்பொழுதும் இருக்கக்கூடியது
    1. சத்தம் 2. திரை 3. படம்

27. இரவில் எப்பொழுதும் இருப்பது
    1. சந்திரன் 2. நட்சத்திரம் 3. இருள்

28. பாண் ஒன்றில் எப்பொழுதும் இருப்பது
    1. பூச்சி, புளு 2. வடிவம் 3. நிறை

**கீழே முதலில் தரப்பட்டுள்ள சம்பவத்துடன் பொருத்தக்கூடிய வாக்கியத் தொடரை அதனையடுத்துத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து கோடிடுக.**

29. பரீட்சையில் சித்தியடையாத பாலா அதனை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.
    1. துள்ளிகின்ற மாடு பொதி சுமப்பதைப் போன்று
    2. நிலத்தில் சிந்திய பாலை நினைத்து அழுவதைப் போன்று
    3. சாண் ஏற முழம் சறுக்குவதைப் போன்று

# இசை சந்தோஷமளிப்பது ஏன்?



அனேகமாக எல்லோருக்குமே இசை பிடிக்கும். இசை கேட்பது. சந்தோஷமளிப்பதற்குக் காரணம் என்ன? அந்த நேரத்தில், மூளையில் ஒரு வேதிப் பொருள் சுரக்கப்படுகிறது. அது தான் இசை ரசிகரின் மனதுக்குள் மகிழ்ச்சியைப் பரப்புகிறது என் கின்றனர் விஞ் ஞானிகள் .மேற் கண்ட வேதிப்பொருளானது. குறிப்பிட்ட ஹத்ரில்' லான இசைக்கணத்தை எதிர்பார்க்கிறது. அப்போது ஏற்படும் துடிப்பை உணர்கிறது.

இதுதொடர்பான ஹடோபமைன் என்ற வேதிப் பொருளின் பங்கு பற்றி ஏற்கனவே விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள். மூளை செல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ள இது உதவுகிறது. புதிய கண்டு பிடிப்பானது. இசை கேட்கும் போது இந்த வேதிப் பொருள் நேரடியாக வெளிப்படுவதைக் காட்டுகிறது. ஒருவர் இசை கேட்டுக்கொண்டி ருக்கும்போதே அவரது மூளையை ஹஸ்கேன் செய்ததன் மூலம் இது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர்பான ஆய்வை மேற்கொண்ட மான்ட்ரியால் மெக்கில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் ஸட்டோர், வலோரி சலிம்பூர் ஆகியோர். ஏன் எல்லா இன மக்களிடமும் இசை பிரபலமாக இருக்கிறது என்றும் கண்டுபிடித்திருக்கின்றனர். அதாவது குரல் தேவையில்லை. இசைக் கருவிகளில் இருந்து எழும் இசையே ஹடோபமைன்' சுரக்கச் செய்துவிடுகிறது என்று இவர்கள் கூறுகின்றனர். இசை கேட்கும் சந்தோஷத்தில் குரலின் பங்கு என்ன என்று மேற்கொண்டு ஆய்வு செய்ய வேண்டும் என்று இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இசை ரசிகர் ஒருவர் ஏதாவது ஒரு இசையைக் கேட்பதை விட, தனக்குப் பிடித்த இசையைக் கேட்கும்போது அதிக ஹடோப மைன் வெளிப்படுவதும் ஸ்கேனில் தெளிவாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஹடோபமைன்' வேதிப் பொருளானது. பொதுவாக 'உறவின்' போது அல்லது சாப்பிடும் போது சந்தோஷத்தை உணர வைக்கிறது. போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் போது 'மிதக்க' வைப்பதும் இதுதான். இசையும் ஒரு போதை தானோ?

# உளவாளி



வானத்தில் பறந்த படியே ஆயிரம் அடி தொலைவில் இருந்து தெள்ளத் தெளிவாக படம் எடுக்கக் கூடிய ரோபோ கமராவை கனடாவை சேர்ந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது. கனடாவை சேர்ந்த நிறுவனம் ஏரியன் லேப்ஸ். உளவு நிறுவனங்களுக்கு தேவையான எலக்ட்ரானிக் கருவிகளை தயாரித்து வருகிறது. சமீபத்தில் இந்நிறுவனம் உருவாக்கியிருப்பது 'ஏரியன் ஸ்கவுட்' எனப்படும் ரோபோ கமரா. இதில் உள்ள தொடுதிறன் திரையின் மூலம் முதலில் கூகுள் நிறுவனத்தின் உலக வரைபட மென்பொருள் மூலமாக நமக்கு வேண்டிய இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

உதாரணமாக நியூயார்க் என்று தேர்வு செய்தால் ஏரியன் ஸ்கவுட் உடனே புறப்பட்டு நியூயார்க் நோக்கி பறக்கத் தொடங்கும். அங்கு சென்றதும் 500 அடி உயரத்தில் பறந்த படியே கீழே நடப்பவற்றை தனது டிஜிட்டல் கமராவில் புகைப் படமாக அல்லது வீடியோ காட்சியாக தொடர்ச்சியாக பதிவு செய்யும். கீழே இருந்து பார்த்தால் ரோபோவை கண்டுபிடிக்க முடியாது. சுமார் ஆயிரம் அடி தொலைவில் இருந்துகூட தெள்ளத் தெளிவான படங்களை எடுக்கும். பதிவாகும் காட்சிகளை மின்னஞ்சலுக்கோ, ஐபோனுக்கோ அனுப்பிக் கொண்டே இருக்கும். இதன் விலை ரூ.22லட்சம். காரில் மிக வேகமாக செல்பவரின் முகத்தைக் கூட இக்கமரா தெளிவாக படம் பிடிக்கும். தப்பிச் செல்லும் கொள்ளையரை பிடிக்கவும், மறைந்திருக்கும் குற்றவாளிகளை பிடிக்கவும் இது உதவிகரமாக இருக்கும் என்கிறது ஏரியன் லேப்ஸ் நிறுவனம்.

# கடல்கன்னி உருவில் பிறந்த சுட்டிக்குழந்தை



கடற்கன்னிகள் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லது படங்களில் கூட பார்த்திருப்பீர்கள். கிட்டத்தட்ட மீன் போன்ற தோற்றத்துடன் அது காணப்படும் முகம் பெண் உருவிலும் உடல் மீனின் உடலமைப்பை போன்றும் ஒட்டிகாணப்படும். இங்கு அவ்வாறான ஒரு விசித்திரமே இந்த சிறுமிக்கு ஏற்பட்டிருக்கிறது. இரு கால்களும் ஒன்றுடன் ஒன்று ஒட்டியவாறு உருவாகியுள்ளது. 6 வயது நிரம்பிய ஸ்பானிஸ் நாட்டைச்சேர்ந்த சிறுமியே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். இவருக்கு சத்திரசிகிச்சை செய்யவதற்கான ஆயத்தங்கள் டாக்கடர் லூயிஸ் ருபியோ என்பவரால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சிறுமி சாதாரண குழந்தைகள் போல் நடமாடுவதை நீங்கள் காணலாம். இதைப்போலவே கால்கள் ஒட்டிப்பிறந்த இன்னுமொரு சிறுமியும் காணப்படுகிறார்.

# கண்களை பாதுகாக்க



நம்முடைய கணினியை காப்பாற்ற antivirus, firewall போன்றபலவற்றை பயன் படுத்துகிறோம். ஆனால் நம் உடல் நலனை பாதுகாப் பதை பலர் மறந்துவிடுகிறோம். நம் உடல் நலமே மிக முக்கியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அதிக நேரம் கணினி முன் வேலை செய்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் இது மிகவும் பயன்படும். இரவு நேரங்களில் நீங்கள் நீண்ட உங்கள் பதிவுகளையோ, கடிதங்களையோ தட்டச்சு செய்து கொண்டு இருப்பீர்களா? உங்கள் கண்கள் சோர்வடைவதை உணர்ந்திருப்பீர்கள்.

பகல் நேரங்களில் உங்கள் மொனிட்டர் திரை நன்கு பிரகாசமாக தெரியும்,அவை பகல் வெளிச்சத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இரவில் அதிக வெளிச்சம் நம் கண்களுக்கு எரிச்சலூட்டும்.நம் மொனிட்டரின் வெளிச்சத்தை பகலிலும், இரவிலும் அடிக்கடி மாற்றிக் கொண்டுருக்க முடியாது.எனவே இந்த செயலி உங்களுக்கு உதவும்.

இது தானாகவே பகலிலும், இரவிலும் உங்கள் இடத்தின் வெளிச்சத்திற்கும், நேரத்திற்கும் ஏற்றவாறு உங்கள் மொனிட்டரின் வெளிச்சத்தை மாற்றும்.

இதன் பெயர் F.lux.

இதனை இங்கு தரவிறக்கி கொள்ளுங்கள்.(http://stereopsis.com/flux/flux-setup.exe)

இதனை இன்ஸ்டோல் செய்து கொள்ளுங்கள். பிறகு Change Settings சென்று

1. ADJUST YOUR LIGHTING FOR DAY AND NIGHT:

உங்களுக்கு வேண்டியவாறு பகலிலும், இரவிலும் எவ்வளவு வெளிச்சம் வேண்டும் என்பதை தேர்வு செய்யுங்கள்.

2. SET YOUR LOCATION:

என்பதில் சென்று Change அழுத்தினால் where am i? என்று தோன்றும்

windowyல் locate என்பதை கிளிக் செய்து வரும் mapயில் உங்கள் இருப்பிடத்தினை தேடி latitude and longitudeid copy செய்து அதில் தரவும்.

3. TRANSITION SPEED:

திடீர் என்று மானிட்டரின் வெளிச்சம் அதிகரிப்பதே, குறைவதே நம் கண்களுக்கு ஒவ்வாது. ஆகவே வெளிச்சம் மாறும் வேகத்தை உங்களுக்கு ஏற்றவாறு தேர்வு செய்யுங்கள்.

இது முற்றலும் இலவசமானது.

# விமானியின் அறை



நாமெல்லாம் பல தடவை விமானத்தில் பயணித்திருப்போம் ஆனால் பயணிகள் இருக்கை மற்றும் மலசலகூடம் இதை விட்டால் வேறு ஒரு இடமும் நகர முடியாது.

எப்படியாவது கொஞ்சம் விமானியின் அறையை பார்க்கலாம் என்று ஆசைப்பட்டால் அது நடக்காது அந்தளவுக்கு கடத்தல் மற்றும் வெடிகுண்டு புரளி என உலகையே பயத்தில் ஆழ்திக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலை இது.

இருந்தாலும் விமானியின் அறையை பல திரைப்படங்களில் பார்த்திருப்போம் ரசித்திருப்போம், ஆனால் இப்படி தெளிவாக பார்த்திருக்கமாட்டோம் இதுவரைக்கும் விமானத்தில் பயணிக்காதவருக்கும் மற்றும் பயணித்தவருக்கும் கண்ணுக்கு விருந்தாய் அமைகிறது இந்த வினோதமான இணையத்தளம்.

இங்கே click (http://www.gillesvidal.com/blogpano/cockpit1.htm) செய்வதன் ஊடாக சுற்றி சுற்றி பெரிதாக்கி ஓட விட்டு பார்த்து மகிழவும்.

# காவலன்



தாரா ஒன்றிற்கு மான் ஒன்று ஏனைய விலங்குகள் நெருங்காமல் காவல் காத்த சம்பவம் ஒன்று அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் உள்ள சவக்காலை ஒன்றில் இந்தத் தாரா வசித்து வருகின்றது.

ஆண் துணையை இழந்து விட்ட நிலையில் தற்பொது குஞ்சு பொரிப்பதற்காக அடை காத்து வருகின்றது. திக்கற்ற நிலையில் தவித்த இப்பறவையுடன் நட்புப் பாராட்டுகின்றது மான். பறவையின் தேவைகளை உணர்ந்து நடந்து கொள்கின்றது. குறிப்பாக பறவையின் பாதுகாவலனாக செயல்படுகின்றது. அன்னியர்கள் பறவையை நெருங்காமல் காவல் கடமை புரிகின்றது.

# மாற்றமொன்றை விரும்பியதனாலேயே மக்கள் அ.தி.மு.கவிற்கு வாக்களித்தனர்

## என்கிறார் வடிவேலு

(சென்னை)

தமிழகத்தில் மாற்றமொன்றை விரும்பியதனாலேயே மக்கள் அம்மாவிற்கு வாக்களித்துள்ளனர். அ.தி.மு.கவால்தான் தே.மு.தி.க.வும் வெற்றி பெற்றதென நடிகர் வடிவேலு தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவைத் தொடர்ந்து விருகம்பாக்கத்தில் உள்ள வடிவேலு வீட்டை தே.மு.தி.க.வினர் முற்றுகையிட்டனர். இதனால் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. விஜயகாந்த் கட்சியினர் தனக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து மிரட்டி வருவதாக வடிவேலு கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது -

நான் ஏன் நாட்டை விட்டு ஓட வேண்டும். மதுரையில் எனது தாய் வீட்டில் இருக்கிறேன். மக்களின் முடிவை ஏற்றுகொள்ள வேண்டும். தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம். விஜயகாந்தை வைத்து அ.தி.மு.க. வெற்றி பெறவில்லை. அ.தி.மு.க.வின் தயவால்தான் தே.மு.தி.க. வெற்றி பெற்றுள்ளது.

விஜயகாந்தால் என்றைக்கும் முதல்-அமைச்சராக முடியாது. தே.மு.தி.க. தொண்டர்கள் தனக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறார்கள். அவர்கள் சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள எனது வீட்டை தாக்கியுள்ளனர். விஜயகாந்துக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்பேன்.

விஜயகாந்த் தன்னை வருங்கால முதல் - அமைச்சர். கறுப்பு எம்.ஜி.ஆர். என தொடர்ந்து கூறினால் அதற்கு எதிராகவே நான் பேசுவேன்.

திரைப்பட வாய்ப்புகள் குறைவது பற்றி நான் கவலைப்படவில்லை. என்னால் என் வாழ்க்கையை சமாளித்துக் கொள்ள முடியும். மாற்றத்தை விரும்பியே தமிழக மக்கள் அம்மாவுக்கு வாக்களித்துள்ளனர். விஜயகாந்திற்கும் இந்த வெற்றிக்கும் துளியும் சம்பந்தமில்லை. இது அம்மாவின் வெற்றியே என அவர் தெரிவித்தார்.



## பழைய இடத்திலேயே புதிய சட்டப் பேரவை


(சென்னை)

தமிழக சட்டப் போரவைத் தேர்தலில் அ.தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. 3 ஆவது முறையாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா முதலமைச்சராக இன்று பொறுப்பேற்கிறார்.

இந்த நிலையில், பழைய தலைமை செயலகத்திலேயே புதிய சட்டப் பேரவை அமைக்கப்படுகிறது. அதறகாக சட்டப்பேரவை இருந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் மற்றும் பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறது.

மேலும் பழைய தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த செம்மொழி தமிழாய்வு மையப் பெயர்ப் பலகை மாற்றப்பட்டு தமிழ்நாடு அரசு தலைமைச்செயலக பெயர்ப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

## சந்திரசேகர் தெரிவானார்



(சென்னை)


தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்க தலைவராக எஸ்.ஏ.சந்திரசேகர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது-

தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தலைவராக இருந்த ராம.நாராயணனும், செயலாளராக பணியாற்றி வந்த சிவசக்தி பாண்டியனும் பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அவர்களின் ராஜினாமாவை சங்கத்தின் செயற்குழு ஏற்றுக்கொண்டது.

சங்கத்தின் புதிய தலைவராக எஸ்.ஏ.சந்திரசேகரன் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார். என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக எதிர்க்கட்சித் தலைவராக விஜயகாந்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்



(சென்னை)

**நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி 205 இடங்களில் அமோக வெற்றி பெற்றது. சட்டசபை தேர்தலில் தே.மு.தி.க. 41 தொகுதியில் போட்டியிட்டு 29 இடங்களில் வெற்றி பெற்றதுடன், எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பிடித்தது.**

வெற்றி பெற்ற தே.மு.தி.க. வேட்பாளர்கள் உடனடியாக சென்னை வருமாறு விஜயகாந்த் அழைப்பு விடுத்தார்.

அதன்படி எம்.எல். ஏ.வாக பதவி ஏற்கும் அனைத்து வேட்பாளர்களும் நேற்றுமுன்தினம் காலை கோயம் பேட்டில் உள்ள கட்சி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தனர்.

இதனையடுத்து தே.மு. தி.க எம். எல். ஏ.க்கள் கூட்டம் சென்னை கோயம் பேடு தே.மு.தி.க. அலுவலகத்தில் நடைபெற்றது.


தே.மு.தி.க.எம்.எல்.ஏ. கூட்டத்தில் விஜயகாந்த் எதிர்க்கட்சி தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

என் வெற்றிக்கு வடிவேலு வசைபாடியதும் ஒரு காரணம். அவருக்கு எனது நன்றி. அ.தி.மு.க.வுடன் உறவு நன்றாக உள்ளது. ஒற்றுமையாக இருக்கிறோம். ஜெயலலிதா உள்ளிட்ட கூட்டணி கட்சித்தலைவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பாடுபடுவோம். எங்கள் செயற்பாடு எப்படி என்பது 3 மாதம் கழித்து நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

முன்மாதிரி சட்ட மன்ற உறுப்பினர்களாக செயற்படுவோம். முக்கிய பிரச்சினைகள் தீர அதிக அக்கறை காட்டுவோம் எனத் தெரிவித்தார்.

## விஜய், சந்திரசேகர் வாழ்த்து



(சென்னை)

சட்டப்பேரவைத் தேர்தலில், பெரும்பான்மை வெற்றி பெற்றிருக்கும், அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதாவை நடிகர் விஜய் மற்றும் அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரும் நேரில் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

விஜயின் மக்கள் இயக்கம் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்திருந்தது. தேர்தலுக்கு முன்னதாக ஜெயலலிதாவை விஜய் நேரில் சந்திப்பார் எனத் தெரிவிக்கப்பட்ட போதும், அவ்வாறான சந்திப்புக்கள் ஏதும் நடைபெறவில்லை.

இருப்பினும் விஜயின் தந்தை சந்திரசேகர் இரு தடவைகள் ஜெயலிதாவை நேரில் சந்தித்திருந்தார். அதனைத் தொடர்ந்து விஜயின் மக்கள் இயக்கம் அதிமுகவுக்கு ஆதரவு தெரிவிக்கும் என அறிவிக்கப்பட்டதுடன், இயக்குனர் சந்திரசேகர் நேரடியான தேர்தல் பிரச்சாரத்திலும் கலந்து கொண்டார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகி, அதிமுகவின் அபார வெற்றி உறுதியானநிலையில், நேற்று மாலை சென்னை போயஸ் கார்டனிலுள்ள அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவின் இல்லத்திற்கு தனது தந்தை சந்திரசேகருடன், நடிகர் விஜயும் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டார்.

# தமிழகத் தேர்தல் முடிவு தொடர்பான நடிகை குஷ்புவின் கருத்திற்கு கண்டனம்




(சென்னை)

தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் நடிகை குஷ்பு வெளியிட்ட கருத்துகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில் அவருக்கெதிராக போஸ்டர்கள ஒட்டப்பட்டுள்ளன.

தமிழக சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று அ.தி.மு.க. ஆட்சியை பிடித்துள்ளது. தி.மு.க. தோல்வியை தழுவியது. தி.மு.க. வுக்கு ஆதரவாக, தமிழகம் முழுவதும் நடிகை குஷ்பு தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். இதற்கு பலன் கிடைக்கவில்லை.

இந்நிலையில் தேர்தல் முடிவு தொடர்பாக கருத்து தெரிவித்த குஷ்பு, இது தி.மு.க. வுக்கு ஏற்பட்ட தோல்வி அல்ல. மக்களுக்கு ஏற்பட்ட தோல்வி. அடுத்த 5 ஆண்டுகளில் மக்கள் மிகவும் கஷ்டப்படப் போகிறார்கள் என்று கூறியிருந்தார்.

குஷ்புவின் இந்த கருத்துக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நடிகை விந்தியா, குஷ்புவுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார். நடிகர் எஸ்.வி. சேகர் கூறும் போது, குஷ்பு அரசியலுக்கு புதுசு. அவருக்கு அனுபவம் இல்லை என்று கருத்து தெரிவித்தார்.

சென்னை உயர் நீதிமன்றில் அ.தி.மு.க. வக்கீல்கள் பிரிவு சார்பிலும், குஷ்புவுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கண்டன போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. மக்களின் மன உணர்வை புண்படுத்தி பேட்டி கொடுத்த குஷ்புவை வன்மையாக கண்டிக்கிறோம் என்பது போன்ற வாசகங்கள் போஸ்டரில் இடம் பெற்றுள்ளன. இந்த போஸ்டர்கள் உயர் நீதிமன்றம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளன.



தமிழக முதல்வராக ஜெயலலிதா இன்று பதவியேற்க உள்ளதை தொடர்ந்து பழைய தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வர் அறை ஜெயலலிதாவுக்காக சுறுசுறுப்பாக தயாராகிக் கொண்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் கருணாநிதி பயன்படுத்திய பொருட்கள் உள்ளிட்டவைகளை அப்புறப்படுத்தும் பணியில் ஊழியர்கள்.

# அத்துமீறி பறக்கும் விமானங்கள் மீது தகுந்த பதிலடி மேற்கொள்ளப்படும்

## அமெரிக்காவிற்கு, பாகிஸ்தான் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

தங்கள் நாட்டின் வான் எல்லை மீது அத்துமீறி பறந்து தாக்குதல் நடத்தினாலோ, ஆள் இல்லாத விமானங்கள் மூலம் குண்டுவீசி தாக்கினாலோ, தகுந்த பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அமெரிக்காவையும் நேட்டோ படைகளையும் பாகிஸ்தான் நாடாளுமன்றம் எச்சரித்துள்ளது.

11 மணி நேர நீண்ட விவாதத்துக்குப் பிறகு பாகிஸ்தான் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் நிறைவேற்றிய ஒரு மனதான தீர்மானத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அபோதபாத் நகரில் மே 2-ம் தேதி காலை நடந்த அமெரிக்க கொமாண்டோ தாக்குதல் குறித்து சுயேச்சையான குழு விசாரிக்க வேண்டும். அப்படி எம்முடைய வான் எல்லையில் அத்துமீறிப் பறக்கவும் நினைத்த இடத்தில் இறங்கித்தாக்கவும் அவர்களுக்கு அனுமதி கொடுத்தது யார்? அப்படி அவர்கள் அனுமதி இல்லாமல் இறங்கியிருந்தால் அவர்களைத் தடுக்கத் தவறியது யார்?

பாகிஸ்தான் எல்லைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதன் மூலம் பாகிஸ்தானின் இறையாண்மையை அலட்சியம் செய்திருக்கிறார்கள் சர்வதேசச் சட்டத்தையே மீறியிருக்கிறார்கள்.

அபோதபாத்தில் நடந்த தாக்குதலும் ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய எல்லைப்புற மாகாணத்தில் பாகிஸ்தானியப் பழங்குடிப் பகுதிகள் மீது டுரோன் ரக விமானங்கள் மூலமும் அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களை இனியும் சகித்துக்கொள்ள முடியாது. இது தொடர்ந்தால் நேட்டோ படைகளுக்கு அளித்து வரும் இடை தங்கல் வசதிகளைத் திரும்பப் பெற நேரிடும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் பின் லேடன் தங்கியிருந்ததைக் கண்டுபிடிக்கத் தவறியதற்காக தார்மிகப் பொறுப்பேற்று பதவி விலகத் தயார் என்று பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் அகமது "ஜா பாஷா முன்வந்தார். அவரையும், ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குநர் மேஜர் ஜெனரல் அ்'பக் நதீம் அகமட், விமானப்படை துணைத் தளபதி ஆசிம் சுலைமான் ஆகியோரையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கேள்விகளால் துளைத்தெடுத்தனர் என்று பின்னர் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க கடற்படை கொமாண்டோ படை தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவுள்ள குழுவை பிரதமரும் தாமும் சேர்ந்து தேர்வு செய்யப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் சௌத்ரி நிசார் அலி கான் பின்னர் நிருபர்களிடம் தெரிவித்தார்.



டுரோன் ரக விமானங்கள் மூலம் நடத்தப்படும் தாக்குதலை நிறுத்த 2 வழிகள் உள்ளன. அப்படி தாக்குதல் நடத்தும் டுரோன்கள் மீது பாகிஸ்தான் விமானப்படை திருப்பித் தாக்குவது, அல்லது நேட்டோ படைகளுக்கு அளித்துவரும் இடை தங்கல் வசதிகளை நிறுத்திவிடுவது என்று செய்தித்துறை அமைச்சர் பிர்தௌஸ் ஆஸிக்அவான் சுட்டிக்காட்டினார்.




## குண்டு வெடிப்பில் அறுவர் பலி

பாகிஸ்தானின் பஞ்சாப் நகரில் பஸ் ஒன்றில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் 6 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 20 பேர் படுகாயம்அடைந்துள்ளனர். பேருந்து இருக்கைக்கு அடியில் குண்டு வைக்கப் பட்டிருந்ததாக போலீஸ் அதிகாரி மியான் சுல்தான் தெரிவித்துள்ளார். சுமார் 50 பேர் பயணம் செய்த இந்த பஸ்சில் 3 பெண்களும், 3 குழந்தைகளும் உயிரிழந்து உள்ளனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து விசாரணை நடத்தப் பட்டு வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

## உளவுத்தகவல் நிறுத்தம்

அமெரிக்கா தன்னிச்சையாக நடவடிக்கை எடுத்து அல் கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனை கொன்றதைத் தொடர்ந்து அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏவுடன் உளவுத் தகவல்களை பகிர்ந்து கொள்வதை பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ நிறுத்திவிட்டது.

பயங்கரவாதிகளின் இருப்பிடங்கள் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்த தாங்கள் உதவியதாகவும், சிஐஏவுக்கு தகவல்கள் அளித்ததாகவும் முன்பு கூறிவந்த ஐஎஸ்ஐ முகவர்கள், இப போது பயங்கரவாதிகள் குறித்து சிஐஏவுக்கு தகவல்கள் அளிக்க மறுத்து வருவதாக சண்டே டெலிகிராப் தெரி வித்துள்ளது. அபோட்டாபாதில் மே 2-ம் தேதி அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்தி பின்லேடனைக் கொன்றனர். இந்த நடவடிக்கை குறித்து பாகிஸ்தானிடம் முன்கூட்டியே தகவல் அளிக்கவில்லை என அமெரிக்கா குறிப்பிட்டிருந்தது. இதனால் கடும்கோபத்தில் உள்ள ஐஎஸ்ஐ, சிஐஏவுடன் உள்ள உறவை துண்டித்துவிட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஹெய்ட்டி நாட்டின் புதிய அதிபர் மிச்செல் மார்டெலி போர்ட்ஆவ்பிரின்ஸில் நடந்த விழாவில் அதிபராக பதவி ஏற்ற பின் தனது ஆதரவாளர்களை பார்த்து கை அசைக்கிறார்.

# குண்டு வீச்சில் கடாபி பலியா? வதந்திகள் பரபரப்பும் சந்தேகம்

(திரிபோலி)

எகிப்தை தொடர்ந்து லிபியா நாட்டிலும் அதிபர் கடாபியை எதிர்த்து மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் மீது ராணுவத்தை ஏவி விட்டு அடக்கு முறையில் இறங்கினார்.

இதையடுத்து அமெரிக்கா மற்றும் அதன் நேச நாட்டு (நேட்டோ) படைகள் லிபியா மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. தலைநகர் திரிபோலியில் அதிபர் கடாபி தங்கியுள்ள பொப்-அல்-அஜீசியா மாளிகை கடுமையாக சேதம் அடைந்தது.

நேற்று முன்தினம் 2-வது நாளாக நேட்டோ படைகள் திரிபோலியில் தாக்குதல் நடத்தின. இதில் பத்திரிகையாளர்கள் உள்பட 3 பேர் பலியானார்கள்.

இந்தத் தாக்குதலில் கடாபி எழுந்து நடமாட முடியாத அளவுக்கு காயம் அடைந்தார். அவரை சிகிச்சைக்காக லிபியாவை விட்டு வேறு எங்கோ எடுத்துச்சென்று விட்டதாக லிபியாவில் வதந்திகள் பரவி உள்ளன. அவர் உயிரோடு இருக்கிறாரா? என்றும் சந்தேகம் எழுதந்துள்ளது.

இந்த நிலையில் கடாபியின் பேச்சுக்கள் அடங்கிய வீடியோ கசட் வெளியிடப்பட்டுள்ளது. அதில், நேட்டோ படைகளால் என்னை கொல்ல முடியாது, அவற்றால் தாக்க முடியாத இடத்தில் நான் இருக்கிறேன் என்றும் கூறி உள்ளார்.

தன்னைப்பற்றி வதந்தி பரவுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கவும், ராணுவம் தன்னை விட்டு விலகாமல் இருக்கவும் கடாபி இந்த வீடியோ



கசட்டை வெளியீட்டு இருப்பதாக கூறப்படுகிறது. இதன் மூலம் அவர் உயிரோடு இருப்பது தெளிவாகி உள்ளது. என்றாலும் அவரால் வெளியே வர முடியாத அளவுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார் என்றும், கொல்லப்படுவோம் என்ற அச்சத்தில் எங்கோ பதுங்கி இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

கடாபி நன்றாக இருக்கிறார், திரிபோலியிலேயே தங்கி இருக்கிறார் என்று லிபிய அரசின் பத்திரிகை தொடர்பாளர் மூசா இப்ராகிம் அறிவித்துள்ளார். ஆனால் கடாபி திரிபோலியில் இல்லை, அவருக்கு கடுமையான காயம் ஏற்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக இத்தாலி நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்கோ பிராட்டினி கூறினார்.

# தலிபான்களுக்கு நிதியுதவியளித்த ஆறுபேரை கண்டுபிடித்த அமெரிக்கா

(ஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள தலிபான் தீவிரவாதிகளுக்கு நிதி உதவி செய்ததாக 6 பேர் மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. இதில் 3 பேர் அமெரிக்கர்கள் இவர்களில் இரண்டு பேர் புளோரிடா மசூதிகளில் இமாம்களாக உள்ளவர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ள இதர 3 பேர் பாகிஸ்தானில் உள்ளனர்.

பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் அமெரிக்கா-பாகிஸ்தான் உறவில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ள நிலையில் இந்த தகவல் வெளியாகி உள்ளது. குற்றம் சாட்டப்பட்டுள்ள 6 பேருக்கும் 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும்.

தலிபான் தீவிரவாதிகளுக்கு நிதி உதவியதாக 6 பேர் மீது நான்கு நிலை குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த விவரத்தை ப்ளோரிடாவுக்கான அமெரிக்க சட்ட அதிகாரி விப்ரடோ பெர்ரர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளுக்கு 50 ஆயிரம் டொலர் வரை நிதி உதவி செய்து இருப்பதாக குற்றச்சாட்டு ஆவணத்தில் உள்ளது. ஒரு பனிப்பாறையில் இது சிறிய அளவு தான் என்று பெர்ரர் கூறினார். தலிபான்களுக்கு உதவிய புளோரிடா நபர் ஹபீஸ்கான், அவரது மகன்கள் இர்பான்கான் மற்றும் இசார்கான் ஆகியோர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மியாமியில் உள்ள புளாக்லர் மசூதியில் ஹபீஸ்கான் இமாமாக உள்ளார். இசார்கான் மியாமிக்கு அருகே உள்ள மார்கேட் ஜமாத் அல்முமினின் மசூதியில் இமாமாக உள்ளார். இந்த மசூதியில் தவறான செயல்களில் ஈடுபடவில்லை என அதிகாரிகள் கூறினார்.

பாகிஸ்தானில உள்ள அல்ரகுமான், அலாம் செப், அமீனாகான் தலிபான்களுக்கு நிதி உதவியாக செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆள்கடத்தல் கொலைசதிக்கும் இவர்கள் உதவியுள்ளதாக கூறப்படுகிறது

# பணிப்பெண்மீது பாலியல் பலாத்தாகரம் ஐ. எம். எப். தலைவர் கைதானார்



(நியுயோர்க்)

சர்வதேச நாணய நிதியத்தின்(ஐஎம்எ:.ப்) தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ்-கான் ஹோட்டல் பணிப்பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததாக நியுயோர்க்கில் கைது செய்யப்பட்டார்.

பாரீஸ் செல்வதற்காக சிறிதுநேரத்தில் விமானத்தில் புறப்பட இருந்த அவரை போலீசார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

ஸ்ட்ராஸ்-கான் 2007-ம் ஆண்டில் இருந்து வாஷிங்டனை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநராக இருந்து வருகிறார். அவரை ஜோன் கென்னடி விமான நிலையத்தில் ஏர் பிரான்ஸ் விமானத்தில் நியுயோர்க் மற்றும் நியுஜெர்ஸி விசாரணை அதிகாரிகள் கைது செய்தனர். பின்னர் அவரை நியுயோர்க் போலீஸ் துறையினர் தங்கள் காவலில் கொண்டுவந்தனர். ஹோட்டல் பணிப்பெண் ஒருவரிடம் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்த குற்றச்சாட்டு தொடர்பாக அவரிடம் விசாரணை நடைபெற்று வருவதாக போலீஸ் துணை கமிஷ்னர் போல் ஜே.பிரௌன் தெரிவித்தார்.

**கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம் தனது 61ஆவது அகவையில் நேற்றைய தினம் காலடி எடுத்துவைத்தது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

# கல்வியின் கலங்கரை விளக்காக

## உருத்திரபுரம் மகாவித்தியாலயம்

"வந்தாரை வாழவைக்கும் வன்னி நாடு", வளநாடு சோறுடைத்து" என்றெல்லாம் பெருமை கொள்ளும் வகையிலே, வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தையும், காடும் காடுசார்ந்த குறிஞ்சி நிலத்தையும், கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தையும், ஒருங்கிணைத்து வளம் கொளிக்கும் பிர தேசம்தான் வன்னிப்பிரதேசம்.

யாழ்.மாவட்டத்துடனிருந்த கிளிநொச்சி 1981இல் தனி மாவட்டமாகி வன்னிப்பிரதேசத்திற்குள் உள்வாங்கப் பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் A9 வீதியின் மேற்குப்பக்கமாக ஏறக்குறைய 10km தூரத்தில் அமைந்துள்ள கரைச்சிப்பிரதேசத்திற்குட்பட்ட இயற் கை எழில் நிரம்பிய கிராமமே உருத்திர புரம்,செல்வம் கொழிக்கும் நெல்மணிகளும் வாளை தென்னை கமுகுடன் வாய்க்கால் வழிந்தோடும் நீரினால் என்றும் பூமித்தாயின் பசுமை நிறைந்த உருத்திரபுத்தின் புராதனத்திற்கு சான்றாக சோழர்கால தொல்பொருள் சான்றுகளையுடைய உருத்திரபுரம் விளங்குகின்றது.

இரணைமடுக்குளத்தை விஸ்தரித்து நெற்செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 1939 இல் முதலாவது விவசாயக் குடியேற்றமாக கணேசபுரம் பகுதியும் 1950 களில் பெருமைக்குரிய பொறிக்கடவை கண்ணகை அம்மன் ஆலயத்தைக் கொண்டுள்ள குஞ்சுப்பரந்தனுக்குத் தெற்கே பரந்தன் குடியிருப்பு என்ற பெயரில் 200மக்களுக்கான குடியேற்றக் காணிகள் வழங்கப்பட்டு இரண்டாவது பகுதியும், 1953இல் மாதாபுரம் என்றழைக்கப்படும் எட்டாம் வாய்க்கால் பகுதியும், 1961 இல் சிவநகர் பகுதியும் 1969இல் சக்திபுரம் (எள்ளுக்காடு) பகுதியும் உருவாக்கப்பட்டு உருத்திபுரம் பகுதி விஸ்தரிக்கப்பட்டது.

இந்நிலையில் இங்கு குடியேறிய மக்களது பிள்ளைகளின் கல்வி வாய்ப்புக்காக உருத்திரபுரம் கூழாவடிச் சந்தியில் தனியார் காணியினுள் தற்காலிக கொட்டகையை அமைத்து 1950.05.15இல் 40 மாணவர் களுடன் இரணைமடு பரந்தன் புதிய கொலனி அரசினர் தமிழ்கலவன் பாடசாலை என்ற பெயரில் இன்றைய உருத்திரபுரம் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. முதல் அதிபராக திரு.இ.சிதம்பரப் பிள்ளை என்பவர் நியமிக்கப்பட்டார் இவ் அதிபரது 19நாள் சேவையுடன் மன்னார் கோயில்க் குளம் பாட சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட போது இச் செயற்திரட்டுப் புத்தக்தில் கறையான் புற்றெடுக்க பாம்புகள் புகுந்த நிலையே எனக்கேற் பட்டுள்ளது. என கூறியிருப்பது இன்றுவரை இங்கு கடமையாற்றிய பலரது மனதில் பதிந்துள்ளது.

1951.06.05இல் இருந்து வே.கதிரவேற்பிள்ளை (அப்புஜீ) அவர்கள் அதிபராகக் கடமையேற்றுள்ளார். 12.02.1951 இல் இவ் வித்தியாலயம் தனக்குரிய சொந்தக் காணி 24.ஏக்கரில் குடியேறியது. ஏறக்குறைய 8 வருடங்கள் (1958) வரையும் இப்பாடசாலையை வளர்த்தெடுத்த பெருமை அப்புஜீ அவர்களையே சாரும் என இன்றுவரை இவ்வூர் மக்கள் இவரை நினைவு கூருகின்றனர்.

1962 இல் விவசாய ஆய்வு கூடமும், 1967 இல் விஞ்ஞான ஆய்வு கூடமும், அமைக்கப்பட்டது. 1963 இல் பாடசாலைக்கான கொடியும் உருவாக்கப்பட்டது.

1956 இல் முதன்முதலாக இவ்வித்தியாலய மாணவர்கள் எஸ்.எஸ் சி எனப்படும் சிரேஷ்ட தராதரப் பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டு 1957இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் பலர் சிறப்புச் சித்திபெற்றிருந்தனர். இக்காலத்தே உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு, ஆசிரியர் இன்மையால் கைவிடப்பட்டது. மீளவும் 1968 இல் உயர்தரவகுப்பு ஆரம்பிக்கப்பட்டு ஆசிரியர் இன்மையால் மாணவர்களை வேறுபாடசாலை மூலம் தோற்றுவித்துள்ளனர் இம்மாணவர்களுள் திரு.க.விமலதாசன் அமரர் திரு.நடேசபிள்ளை என்போர் பல்கலைக்கழகம் சென்றனர் இவர்களுள் திரு நடேசபிள்ளை (அமரர்) அவர்கள் இலங்கை கல்வி நிருவாக சேவையில் சித்திபெற்று நிருவாக அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார் .என்பதும் குறிப்பிடத்தக்கது.


இவ் விதம் உயர்கல்விக்கு வித்திட்ட இவ் வித்தியாலயத்தில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை யானது உயதரவகுப்புக்களை ஆரம்பிப்ப தும் நிறுத்துவதுமாகவுள்ளது எனினும் இங்கு ஆரம்பக்கல்வி முதல் இடை நிலைக் கல்விவரை கற்று வேறு பாட சாலைகளில் உயர்தரக் கல்வியைக் கற்று பல்கலைக கழகம் சென்றவர்களுள் திரு.க.கணேசு, திரு.க.மகேசன் திரு.மு.சண்முகராசா, திரு.ஐயம்பெருமாள், திருமதி.கமலாதேவி, திருமதி.ச.கமலாவதி, திருமதி.இ.மீனலோஜினி,திருமதி யோ.மஞ்சுளா,திருமதி சி.சர்வேஸ்வரி, திருமதி நவமாலசேகரி, திருமதி ஜெயா, திருமதி ஜக்குலின் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள்.

இந் நிலையில் மீளவும் 1987 இல் இவ்வித்தியாலயம் 1C பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு அன்றைய அதிபராக விருந்த திரு.கா.நாகலிங்கம் அவர்களது காலத்தில் க.பொ.த(உ/த) கலை,வர்த் தக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1990இல் அதிபராகக் கடமையேற்ற திரு.இ.மு.சண்முகராசா (அமரர்) இப்பாடசாலையின் பழைய மாணவன்,இவரது முயற்சியால்,1993இல் அன்ரனிற்றா பூலியற்,திரு.ஆனந்தராஜ (இவர் விழிப்புலன் குறைபாடுடையவர்)வும், 1994 இல் அ.கலைவாணி 1995இல் க.சிவகுமார், மு.கயல்விழி,பா.பவானி,கு.சுரேஸ்கரன்,ப.சுரேந்திரன் முதலானோரும் கலை வர்த்தக பீடத்திற்கும் அ.சிம்சன் போல் சட்டபீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்ட னர்.

இப்படி முறை வளர்ச்சியின் பயனாக, தொடர்ந்து வந்த ஆண்டுகளில் பல் கலைக்கழகத்திற்கும் வேறு உயர்கல்வி நிறுவனங்களுக்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களாக செ,பிரதீபன், கா.சந்திரவதனி,நா.சந்திரகுமாரன்,அ.சாந்தகுமாரி, ச.கங்காதரன்,கு.பிரசன்னா,க.மயூரன், மா.சுகந்தன், இ.பத்மகுமார்,க.கமலேஸ்வரன்,வி.சரூபன், சு.தனுசியா, ம.தமிழினி, ச.ஜெனிதா,ச.சர்மிளா,க.சர்மிளா, பே.சாமினி, க.விமலேஸ்வரி,இ.யசிகரன், ரவிதுஷா,த.துஷந்தா,க.நிசாந்தினி, செ.சைலஜா,செ.செவ்ளே்,க.யதார்த்திகா,இ.கிஷாந்தி,விதர்சிகா,சுரேகா, ச.டினேஸ்காந்(அமரர்) தி.கஜதீபா(அமரர்) இ.சுபாஜினி,உ.துளசிகா(சட்டபீடம்) சி.சிவகுமார்,சு.சர்மிளா,வே.பிரபாகரன்,ர.வித்யா, கோ.மயூரா,க.விதுஜா,கு.கிஸ்ணா,முதலானோர் சென்றுள்ளார் (இன்னும் ஞாபகத்திற்கு வராத மாணவர்கள் இருப்பார்கள் ஆவணங்கள் யாவும் அழிவடைந்த நிலையில் திரட்டிய தரவுகள் இவை)

இதேபோன்று தேசிய கல்வியல் கல்லூரிக்கு அனுமதி பெற்றவர்களாக, ச.சுதர்சினி,க.கலைவாணி,தி.சித்திரலேகா, தி.தியாகேஸ்வரன்,டொ.சகிலன்,சு.தவரூபி, ந.தவரூபன்,க.சிவதர்சினி,க.மணிவதனி முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். அத்துடன் க.பொ.த(சா/த) வையும் கற்று கணித விஞ்ஞானத்துறைக்கு சென்ற மாணவர்களுன் மா.ஆரணி (வைத்தியர்) க.ராஜ்கிரி (பொறியிய லாளர்) மா.குருபரன் (பொறியியலாளர்) கபிலா (மருத்துவபீட மாணவி) சீ.ஹே மதர்சினி (ம.பீ.மாணவி) மா.கார்த்திகா (மருத்துபீட மாணவி) மா.அருளினி (மருத்துவபீட மாணவி) முதலானோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பல்கலைக் கழகத்திற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்து உயர்தரக் கல்வியோடு தொழில்வாய்ப் பைப் பெற்ற இப்பாடசாலையின் பழைய மாணவர்களுள் 80ழுமானோர் இம் மாவட்டத்தின் பாடசாலை அதிபர், ஆசிரியர்களாகவும் திணைக்களங்களில் உத்தியோகத்தர்களாகவும் கடமை புரிகின்ற னர் இப்பாடசாலையில் கல்வி கற்று பட்டதாரிகளாகவும் அதிபர் தரத்துடனும் அதிபராகக்




கடமைபுரிந்தவர்களுள் திரு.மு.சண்முகராசா(அமரர்)திரு. சு.கணேசதாசன்,திரு.நா.கணேஸ் வரநா தன் திருமதி.மீ.இதயசிவதாஸ் (இன்றைய அதிபர்) ஆகியோர் குறிப்பிடத்தக்வர்கள்.

காலத்திற்குக் காலம் பல்வேறு நெருக்கடிகளை இப்பாடசாலை சந்தித்த போதும், கல்வியின் கலங் கரை விளக்காக இன்று வரைத்தி கழும் இவ் வித்தியாலயத்தின் தரம் 5 மாணவர்களும் வருடம் தோறும் சாதனை படைத்து வருகின்றார்கள். கடந்த வருடம் மாவட்டத்தில் 5ஆவது நிலையை செல்வி.யோ.சதனிகா பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக் கது.

அத்துடன் கலை,இலக்கிய விளையாட்டுக்களிலும் சாதனை படைத்து வருகின்றார்கள்.இப்பாடசாலை மாணவர்கள், உதைபந்தாட்டம் என்றால் அது உருத்திரபுரம் என்று கூறுமளவிற்கு சாதனை வீரர்களைக் கொண்டது மட்டுமன்றி, உதைபந்தாட்டப் பெண்கள் அணியையும் தன்னகத்தே கொண்ட ஒரு பாடசாலையாக விளங்குவது பெருமைக்குரியவை.

இத்தகைய வரலாற்றுப் பெருமையுடைய இவ்வித்தியாலயம் நேற்று தனது அறுபத்தோராவது அக வையில் காலடி வைக்கின்றது.1953 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடத்திற்குப் பின்பு இன்று வரை புதிய கட்டடம் எத னையும் காணவில்லை.அண்மைய இடப் பெயர்வு இருந்த கட்டடங்களையும் சிதைத்துள்ளது. 02.06.2011 இல் மீளக் குடியமர்வு ஏற்பட்டபின் பாடசாலையில் இன்றுஏறக் குறைய 500 மாணவர்கள் கல்வி கற்கின் றனர். 20 வகுப்புகள் கொண்ட கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கு 7 வகுப்புக்கள் நிரந்தர கட்டடத்தினுள்ளும், 3வகுப்புகள் தற்காலிகக் கொட்டகை யினுள்ளும் மிகுதி மரநிழலிலும் நடை பெறுகின்றன. 60x20



கட்டடத்தினுள் சீற் போட்டு பிரித்தடைத்து கணினி அறை, அலுவலகம், நூலகம் இயங்குகின்றன.

இடப்பெயர்வின் பின்பு பொறுப்பேற்றுள்ள அதிபரும்,ஆசிரியர்களும் தமது பல்வேறு வியூகத்தினூடாக சமூக ஒருங்கிணைப்பைப் பெற்றுச் சில அடிப்படை வசதிகளை மாணவர் களுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளனர். இதற்குச் சான்றாக மின்சார வசதியற்ற நிலையிலும் மின்பிறப்பாக்கியைப் பெற்று தரம் 1-13 வரையான வகுப்புகளுக்கு கணினிக் கல்வி அளிக்கப்படுவது பாராட்டத்தக்க விடயமாகும்.

ஈழத்தில் தமிழ் வளர்த்து புகழ் பெற்ற பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களால் நாட்டப்பட்ட வெள்ளைக் கொழும்பானும்,ஆசிரியர்களான திரு.ச.குமாரவேலு, திரு.த.பழனிவேலு ஆகியோராலும் நாட்டப்பட்ட வேப்ப மரமும் அவ்வப்போதிருந்த அதிபர், ஆசிரியர்களால் நாட்டப்பட்ட மரங்களுமே இன்றைய மாணவர்களின் வகுப்பறையாகவுள்ளன. மகிழ்ச்சியான கற்றல் சூழ் நிலையாக விருப்பினும் அண்மைய இயற் கையின் சீற்றம் இம்மாணவர்களையும், ஆசிரியர் களையும் துரத்திய வண்ணமேயுள்ளது.

கட்டட வசதிகளற்ற நிலையில் மாணவர்களின் நாட்டம் நகர்ப்புறம் சார்ந்திருப்பதாக இப்பாடசாலை அதிபர் ஆதங்கப்படுகின்றார். ஏனெனில் இடப் பெயர்வுக்கு முன்பு ஏறக்குறைய 800 மாணவர்கள் இருந்த நிலையில் மீளக் குடியமர்வில் வசதி வாய்ப்புடைய பெற்றோர்கள் தம்பிள்ளைகளை நகரப் பள்ளிகளுக்கு நகர்த்துகின்றனர். பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டபோது USAID புதிய கட்டடத்தை அமைத்துத் தருவதாக கல்வி அதிகாரிகள் குறிப்பிட்டிருந்த போதும் இன்னமும் இது கைகூட வில்லை என்பது இவ்வித்தியாலய கல்விச் சமூகத்தின் ஏக்கமாகவுள்ளது. நாட்டின் உயர் பிரமுகர்கள் எனக் கூறக்கூடிய கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ஷ, மு.சந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன் (இவரும் இப்பாடசாலையின் பழைய மாணவன்) முதலானோர் மீள்குடியேற் றத்தின் பின்பு இவ்வித்தியாலயத்தைத் தரிசித்துள்ளனர். இவ்வேளையில் இவ்வித்தியாலய கல்விச் சமூகத்திடம் புதுத்தெம்பு பிறக்கும். ஆயினும், இன் னும் ஒரு நற்காரியமும் கைகூட வில்லை.

சமூக ஒத்துழைப்புடன் இவ்வித்தியாலயத்தின் சுற்றுவேலிகள், மைதா னப் புனரமைப்பு, குடிநீர் வசதி, சிறு வர் பூங்கா என்பவற்றை மீள் உருவாக் கம் செய்து தந்த பெருமை திரு.கதிர் காமநாதன்,திரு.சு.வெற்றிமையில் நாதன் ஆகியோரைச் சாரும். இன்னும் இவ்வித்தியாலயத்தின் ஆளணியினரின் முயற்சிக்குச் சான்றாக தோட்டச் செய்கை, கோழி வளர்ப்பு என்பனவும் விளங்குகின்றன. இந்நிலையில் இவர்களால் உரு வாக்க முடியாத கட்டட வளமும் இவர் களுக்குக் கிடைக்குமாயின், மீண்டும் உயிர்த்துடிப்புள்ள வித்தியாலயமாக துரித வளர்ச்சி பெறும் என்பதில் ஐய மில்லை. இடப்பெயர்வின் காரணமாக ஆவணங்கள் யாவும் அழிவடைந்த நிலையில் இவ்வித்தியாலய தரவுகள் பல கிடைக்கப் பெறமுடியாதுள்ளமை பாடசாலையின் சாதனைகளையும் மாணவர் தரவுகளையும் முழுமையாக குறிப்பிட்டுக் கூறமுடியா திருப்பது வேதனைக்குரியதே. எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் முதல் பல்வேறு உயர் அதிகாரிகளை யம் உருவாக்கிய எம் வித்தியாலயம் இன்னுமென்னும் மலரப்போகும் இளைய சந்ததியினரை இந்நாட்டுக்குத் தந்த நற்பிரஜை களாக உருவாக்க ஏற்ற களமாக மாற்றுவதற்கான முயற்சிகளுக்கு அதிகாரிகளும் உதவ முன் வர வேண்டும். அகவை அறுபத்தொன்றி லாவது புத்தொளி பெறுவேனா என ஏங்கும் எம் வித்தியாலயத்தை ஏற்றம் பெற உதவுபவர் களால் இன்னும் புகழ் பரப்பும் என்பதில் ஐயமில்லை.அகவை அறுபத்தொன்று முதல் ஆரம்ப நாள் பரிசில் நாளாக நினைவு கூர, இன் றைய நிர்வாகம் எடுத்திருக் கும் முயற்சி பாராட்டுக்குரியது. 'எம் வாழ்விற்கு ஏணியாக எம் வித்தியாலயம்' இவ்வாண்டு முதல் ஒளிவீசும் என்பதில் ஐயமில்லை. எம் ஏக்கத் திற்கும் எதிர்பார்ப்புக்கும் விடை கிடைக் கும். வளமோடு புகழ் ஓங்க வாழ்த்துக் கூறி நிற்கின்றேன். ●

எம்.சிவமூர்த்தி

# தனியார் பஸ்களில் கப்பம்; தடுத்து நிறுத்த ஏற்பாடு



(கொழும்பு)

தனியார் பஸ்களில் கப்பம் பெறும் சம்பவங்களைத் தடுப்பதற்காக, பொலிஸ் விசேட அதிரடிப் படையின் ஒத்துழைப்புடன் நாடளாவிய நடவடிக்கையொன்றை ஆரம்பிக்க தனியார் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

தனியார் பஸ்களில் கப்பம் பெறும் சம்பவங்கள் தொடர்பாக நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக அமைச்சர் சீ.பி.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

கடந்த சில தினங்களாக புறக்கோட்டை பெஸ்தியன் மாவத்தையில் கப்பச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக ஆறு பேர் கைது செய்யப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த நிலைமை காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியிருப்பதாகவும், இதனால் அவர்கள் சேவையை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் பொலிஸ் மாஅதிபர் ஆகியோருக்கும் இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கப்பம் கோருகின்றவர்களையும், கப்பம் வழங்குகின்றவர்களையும் சுற்றிவளைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதுதொடர்பாக, கைதானவர்களில் யாழ். மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# மன்னார் தபாலகம் இப்போது கணினிமயம்

(மன்னார்)

மன்னார் பிரதம தபாலகம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்கி வருகிறது. இந்தத் தபாலகத்தில் கணினிமயப்படுத்தப்பட்ட கீழ் வரும் சேவைகள் நடைபெற்று வருகின்றன.

மின்சாரப்பட்டியல் கட்டணம் செலுத்துதல், காசுக்கட்டளை வழங்கல், கொடுப்பனவு தேசிய வங்கிச் சேவைகள், மொபிற்றல் பட்டியல் கட்டணம் செலுத்தல் என்பனவும் ஏனைய வழமையான சேவைகளும் இடம்பெற்று வருவதாக மன்னார் மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்.சின்னப்பு தெரிவித்துள்ளார்.

இதேபோல மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார், மன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, வங்காலை, முருங்கன், மடுக்கோவில், சிலாவத்துறை ஆகிய எட்டு தபாலகங்களிலும் கணினிமயப்படுத்தப்பட்ட சேவைகள் நடைபெற்று வருகின்றன. (08)

# தப்பிச்சென்ற கைதிகள் பொலிஸாரால் மீண்டும் கைது

(கொழும்பு)

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து கடந்த மாதம் தப்பிச் சென்ற புலிச் சந்தேக நபர்கள் நால்வரில் மூவர் நேற்றுக் காலை திருகோணமலை துறைமுக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களின் பிரகாரம் திருகோணமலை, வெருகல் மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பிரதேசத்தில் ஏற்பட்ட பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேற்படி நான்கு சந்தேகநபர்களும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி இவர்கள் நால்வரும் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றனர். இவர்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வந்த பொலிஸாருக்கு வெருகல் பிரதேசத்தில் இவர்களில் இருவர் மறைந்திருப்பதாகத் தகவல் கிடைததது.

இந்நிலையில், குறித்த பிரதேசத்தைச் சுற்றிவளைத்த திருகோணமலை, துறைமுகப் பொலிஸார் அவ்விருவரையும் கைது செய்ததுடன் அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் கிண்ணியா பிரதேசத்தில் மறைந்திருந்த மற்றுமொரு கைதியையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்த பொலிஸார், தப்பிச் சென்ற மற்றுமொரு கைதி தொடர்பிலும் அவர்களிடம், தகவல் திரட்டி வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிட்டனர்.

# லோகநாதனை சுட்டவர் கிழக்கு யுத்தத்தில் பலி

(கொழும்பு)

அரசாங்க சமாதான செயலகத்தின் பிரதித் தலைவர் கேதீஸ்வரன் லோகநாதனின் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் மூதூரில் யுத்தத்தின் போது கொல்லப்பட்டதாக கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் பயங்கரவாத புலனாய்வுப் பணியகத்தினால் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

கேதீஸ்வரன் லோகநாதன் கடந்த 12.08.2006 ஆம் திகதி தெஹிவளையிலுள்ள அவரின் வீட்டில் வைத்து சுடப்பட்டார்.

புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த மோகனதாஸ் திவாகரன் எனும் மேற்படி சந்தேக நபர் மூதூரில் ஆயுதப் படைகளால் கொல்லப்பட்டதாக பயங்கரவாத புலனாய்வுப் பணியகம் கல்கிஸை பிரதான நீதிவான் திருமதி நிரேஷா பெர்னாண்டோ முன்னிலையில் சமர்ப்பித்த மனுவொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபரைக் கைதுசெய்வதற்கு மேற்கொண்ட விசாரணையின்போதே இது தெரிய வந்ததாக பயங்கரவாத புலனாய்வுப் பணியகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## நாம் குறுகிய சுயலாப....

தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையை மீளவும் கல்விச் செயற்பாடுகளுக்காக திறந்தமையிட்டும், இப்பாடசாலைக்கான பல்வேறு உதவிகளை தொடர்ந்து வழங்கி வருவதையிட்டும் இப்பகுதி மக்கள் அமைச்சர் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கின்றனர் எனவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

விநாயகமூர்த்தி அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அப்பகுதி மக்கள், தங்களது மீள்குடியேற்றங்கள் மீள்குடியேற்றப்பட்டவர்களுக்கான உதவிகள் இன்னமும் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்படாதிருக்கும் ஆலயங்களுக்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகள், பாதை புனரமைப்புக்கள் போன்ற பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் அவர்களிடம் முன்வைத்தனர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தை நாம் ஆரம்பத்தில் திறந்து வைத்தோம். இதனை சில பத்திரிகைகள் கேலி செய்ததுடன், வந்து திறந்து விட்டு போனார்கள். அவ்வளவுதான் இனிமேல் ஒன்றுமே நடக்காது என்று கூறின.

ஆனால் நடந்தது என்ன? இன்று இப்பாடசாலையைப் பாருங்கள்? உங்கள் கண் முன்பே எந்தளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை நீங்கள் காணுகின்றீர்கள்.

நாங்கள் எதைக் கூறுகின்றோமோ அதைச் செய்பவர்கள் எதைச் செய்கின்றோமோ அதையே கூறுவோம். மற்றவர்களைப் போல் குறுகிய சுயலாப அரசியல் கருதி பேசுபவர்கள் அல்லர் என்று அமைச்சர் அவர்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்தார்.

இதேவேளை, கொக்குவில் மக்கள் நலன்புரி நம்பிக்கை நிதியமும் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையமும் இணைந்து நேற்றைய தினம் மூத்த பிஜைகளுக்கான கௌரவிப்பு விழாவினை நடாத்தின.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறான ஏற்பாடுகள் சிறப்பானவை. வரவேற்கத்தக்கவை. சமூகத்தின் மூத்த பிரஜைகளை மதித்து அவர்களை கௌரவிக்கும் செயற்பாடுகளினூடாக அவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் பாராட்டத்தக்கவையாகும்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்று ஒரு சுமுகமான நிலைமை எம்முன் தோன்றியுள்ளது. இதனை நாம் பாதுகாக்க வேண்டும். எமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி எமது சொந்த கால்களில், தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய சமூகமாக நாம் முன்னேற வேண்டும். எனது உழைப்பும் இதனை நோக்கமாகவே கொண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோரும் உரையாற்றினர்.

## யாழ். படைகளின்...

மங்கள வாத்தியங்கள் இசைக்க தளபதி ஹத்துருசிங்கவும் படையினரும் சம்பிரதாய முறைப்படி ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். ஆலயத்தின் பிரதம குருக்கள் சர்மா தலைமை தாங்கி யாகத்தை நடத்தி வைத்தார்.

## பொலிஸ் நடமாடும்...

வலி.மேற்கு விவாகப் பதிவாளர் திருமதி சியாமளா இரத்தின சேகர் விவாகப் பதிவுகளை மேற்கொண்டதோடு உடனடியாகவே பிரதிகளை வழங்கினார்.

அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களும் பிறப்பு, இறப்பு, பதிவுப்பத்திரம் பெற்றுக் கொள்ளாதோருக்கும் தேவையான ஆவணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு பொலிஸார் வாழை மரம், தென்னம் கன்று, கமுகு போன்றவைகளை வழங்கினர். வலைப்பந்து, கரப்பந்து, விவாத அரங்கு போன்ற மாணவர்களின் நிகழ் வுகளும் இடம்பெற்றன.

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெற்ற நடமாடும் சேவையில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு சேவைகளைப் பெற்றுக்கொண்டனர். (கா, 104)

## தென்னிந்திய...

துறைமுகங்களில், கப்பல்களுக்கு இடையேயான சரக்கு பரிமாற்றங்கள் நவீன முறையில் செயல்படுவதனால் பெரும்பாலான வெளிநாட்டு கப்பல்கள் தென்னிந்தியாவை நாடும் ஏது நிலை உள்ளதாகவும் அந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த முறைமைக்கு அமைய சரக்குகள் துரித கதியில் குறைந்த கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கப்பல்கள் சிறந்த சேவையினை பெறுவதற்கு இந்திய துறைமுகங்களை நாடுகதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெங்குச் செய்கையை விருத்தி செய்ய நடவடிக்கை



(கொழும்பு)

தெங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரவகைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கொன 22 கோடியே 80 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தெங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிக்க முடியம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளாவிய ரீதியாக தெங்கு உற்பத்தி 10 லட்சத்திற்கும் மேற்பட்டதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் வருடத்திற்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காயின் எண்ணிக்கை 10 லட்சத்து இரண்டாயிரத்து 16 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 30 ஆயிரம் தொன்னுக்கும் மேற்பட்ட நிறையைக் கொண்ட தேங்காய் எண்ணெய் பெறப்படுகின்றது.

இந்த நிலையில் வருடத்திற்கு 90 ஆயிரம் தொன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் வர்தக தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

## யுத்த அழிவுகளின்...

உலக வங்கி, அபிவிருத்தி மேற்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

வலிவடக்கின் மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வாபுரம், தெல்லிப்பளை, வறுத்தலைவிளான், கொல்லங்கலட்டி, கீரிமலை, பளை, வீமன்காமம் ஆகியவற்றின் வடக்கு, தெற்கின் ஒரு பகுதியிலும் கடந்த 9 ஆம் திகதி இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விரிவுரையாளர்களின் போராட்டம் மேலும் தீவிரமடையும் அறிகுறி

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதன முரண்பாட்டுக்குத் தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொடர்ந்தும் தமது தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த எண்ணியுள்ளதாக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் கல்விப் பொதுத்தராதர பத்திர உயர்தரப் பரீட்சை விடைத் தாள்களை திருத்தும் நடவடிக்கைகளில் இருந்தும் விலகப் போவதாக அவர்கள் அறிவித்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் இன்று நடாத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அதன் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களில் நடவடிக்கைகள் கிரமமாகவே இடைநிறுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தமது ஒற்றுமையான பலத்தைக் வெளிக்காட்டியுள்ளதாக குறிப்பிட்ட அவர், அதனைப் பயன்படுத்தி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நிர்மால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இதனூடாக தமது சேவையை பெறும் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கையை பாதிப்படைய செய்வது தமது நோக்கம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புனர்வாழ்வுப் பயிற்சி நெறிக்கு முன்னாள் புலிகள் விண்ணப்பிக்கலாம்

புனர்வாழ்வு பயிற்சி பெறாத முன்னாள் புலிகள் இப்பயிற்சி பெறுவதற்காக புனர்வாழ்வு நிலையங்களில் இணைய முடியும் என புனர் வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தெரி வித்தார்.

இத்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற விரும்புபவர்கள் அருகிலுள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்களது பெயர்களைப் பதிவுசெய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

அவ்வாறு இணைபவர்கள் நீதிவான் அனுமதியுடன் புனர்வாழ்வு நிலையத்தில் இணைத்துக கொள்ளப்படுவார்கள் என மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சிகளை போன்ற பயிற்சிகள் இவர்களுக்கும் வழங்கப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் என்ற சான்றிதழ்களும் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இறுதிக்கட்டயுத்தத் தின் போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்தவர்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒன்பது புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் போராட்டம் எம்மைப் பின்தள்ளிவிட்டது

## இப்படிக் கூறுகிறார் எம்.பி.பிரபா கணேசன்



(கொழும்பு)

கடந்தகால புலிகளின் போராட்டங்களின்போது எங்களுக்கும் உள் மனதில் சிறு ஆசை இருந்தது. சிறுபான்மை மக்களுக்கு ஏதாவது நன்மை கிடைக்குமென. ஆனால், புலிகள் கிடைத்த பல வாய்ப்புக்களை தவறவிட்டிருக்கிறார்கள். எமது நாட்டின் ஜனாதிபதிகள் பல முறை பல சந்தர்ப்பங்களை வழங்கியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதை ஏற்க மறுத்ததனால் தாமும் அழிந்து எங்களையும் அழிவிற்குள் தள்ளி பின் தள்ளிவிட்டிருக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கூறினார்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைமைக் காரியாலயம் கொழும்பு பம்பலப்பிட்டியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அங்கு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் மேற்படி குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், இங்கு திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற தொழிற்சங்க காரியாலயமானது மக்களின் நலனுக்காகவே பயன்படவுள்ளது. குறிப்பாக அடக்கி ஒடுக்கப்படுகின்ற தோட்ட தொழிலாளர்களின் அவலங்களுக்கு குரல்கொடுக்கின்ற இடமாகவே இது இருக்கும். இது என்னுடைய கட்சி காரியாலயமல்ல. இது தோட்ட தொழிலாளர்களின் காரியாலயம். இங்கு எந்நேரமும் நீங்கள் வரலாம். உங்கள் குறைகளை எங்களிடம் தெரிவியுங்கள். நிச்சயமாக உங்கள் குறை தீர்க்க நாங்கள் பாடுபடுவோம்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் உறுப்பினராக இருந்து கொண்டுதான் இந்த தொழிற்சங்கத்தையும் ஆரம் பித்திருக்கிறேன். இதன்நோக்கம் எனது அரசியலை ஸ்திரப்படுத் துவதல்ல. பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவுவதே என்றும் அவர் தெரிவித்தார்.

# தகவல் தொழில் நுட்பத்தில் புரட்சி கூகிள் அறிமுகம் செய்யும் லேப்ரொப்

கூகிள் நிறுவனம் ஒரு புதிய வகையான லேப்ரொப்பை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்த லேப்ரொப்புக்குள் புரோக்ராம்கள் எனப்படும் மென்பொருள்கள் கிடையாது. அவை லேப்ரொப்புக்குள் இல்லையே தவிர, அவை எங்கோ ஒரு கண்ணுக்கு புலப்படாத இடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தை கிளவுட் என்று கூறுகிறார்கள்.

இந்த லேப்ரொப் கொண்டு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்றால், இந்த லேப் ரொப்பில் இருந்து இண்டர்நெட் மூலமாக அந்தக் கண்ணுக்கு புலப்படாத இடத்தில் உங்கள் புகைப்படங்கள், ஆவணங்கள் எல்லாவற்றையும் சேமித்து வைக்கலாம். தேவைப்படும் போது எடுத்துப் பயன்படுத்தலாம்.

இப்படி லேப்ரொப்புக்குள் சேமித்து வைக்கும் மென்பொருள் மூலமாக செய்யும் அனைத்து வேலைகளையும், லேப்ரொப்பில் மென்பொருள் இல்லாமல் எங்கோ சேமித்து வைத்திருக்கும் மென்பொருளை இண்டர்நெட் மூலமாக பயன்படுத்துவதால் லேப்ரொப்புகளின் விலை குறையும், அதிக செயல்திறன் தேவையில்லை, அடுத்ததாக விரைவாக லேப்ரொப்பை உயிர்ப்பித்து விடலாம், பட்டரி எனப்படும் மின்சக்தி நேரமும் நீட்டிக்கலாம் என்பது போன்ற பலன்கள கிடையாது என்று கூறுகின்றனர்.

இந்தக் கருத்தை பிரதிபலிப்பவர் தொழில்நுட்ப நிபுணரான ரூபர்ட் குட்வின்ஸ், இவர் இசட்டி நெட் என்னும் சஞ்சிகையின் ஆசிரியர். அத்தோடு, இந்தப் புதிய நுட்பத்தால், மைக்ரோசாப்ட் நிறுவனம் தான் அதிகம் பாதிக்கப்படும் என்றும் அவர் கூறுகிறார்.

ஏனென்றால், தற்சமயம் உலகத்தில் இருக்கும் லேப்ரொப்புகளில் 90 சதவீதம், இவர்களின் மென்பொருள் தயாரிப்புகளால் தான் இயங்கி வருகின்றன.

அதே சமயம், இண்டர்நெட் இணைப்பு இருந்தால் மட்டுமே பெரும்பாலான செயல்களை இந்த லேப்ரொப்பில் செய்ய முடியும் என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஏனென்றால், இன்னமும் உலகத்தின் பல பகுதிகளில் இண்டர்நெட் சேவை என்பது முழுதாக கிடைக்கவில்லை, அல்லதங்கு தடையின்றி கிடைக்கவில்லை.

இது போன்ற காரணங்களால் கூகிளின் குரோம் நோட்புக் விற்பனை எப்படி இருக்கும் என்பது சரியாக கூற முடியவில்லை.

இதற்கிடையே, ஒரு சில நிபுணர்கள் கூகிளின் இந்த லேப்ரொப் புரட்சி ஒன்றும் கிடையாது, இது ஒரு பரிணாம வளர்ச்சி தான், ஏனென்றால், இன்றுள்ள நவீன செல்போன்கள், டேப்ளட் கணினி எனப்படும் சின்னஞ் சிறு கணினிகள் எல்லாம் இந்த முறையிலேயே இயங்கி வருகின்றன என்பதை குறிப்பிடுகின்றனர்.

# புலம்பெயர்ந்த தமிழர்களால் இலங்கைக்கு பாதிப்பில்லை

புலம் பெயர்ந்த தமிழர்களின் நடவடிக்கைகள் காரணமாக இலங்கையை ஏனைய நாடுகளிடம் இருந்து பிரிப்பதற்கு முடியாது என அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தனி யொருவரின் செயற்பாடுகள் சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களை எதிராக மேற்கொள்ள முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது, புலம் பெயர்ந்த நிலையில் சில நாடுகளில உள்ள தனிப்பட்ட சிலரால் இலங் கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் எதிர்ப்பு நடவடிக்கைகள் அந்தந்த நாடுகளின் நிலைப்பாடுகள் அல்லவெனவும் அமைச்சர் சுட்டிகாட்டியுள்ளார்.

## யாழில் இந்திய...

பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள், இலவச தொழில்சார் வழிகாட்டுதலும், ஆலோசனையும், தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள், விமானப் போக்குவரத்துத்துறை கல்வி நிலையங்கள், வியாபாரப் பாடசாலைகள், தகவல் தொழில்நுட்ப மற்றும் பொறியி யல் கல்லூரிகள், தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள், சந்தைப்படுத்தல், ஹோட்டல் மற்றும் சுற்றுலா முகாமைத்துவம், நிதி மற்றும் வங்கி, கடற்போக்குவரத்து கல்வி நிலையங்கள், கல்வி ஆலோசகர்கள், உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக் கலை, செயலக அலுவல் பயிற்சி, மருத்துவம் மற்றும் தாதி மூன்றாம் நிலைக் கல்வி, நுண்கலை மற்றும் நவநாகரிக கலை, பாடசாலை ஆகிய துறைகள் தொடர்பாக இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

எனவே அனைவரும் இக் கண்காட்சியில் கலந்துகொண்டு பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## நாமலின்...

மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்கவின் நேரடி அறிவுறுத்தலின் கீழ் புலனாய்வு விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## மன்னார்...

கருதப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் அங்கு மேற்கொள்ளப் படுகின்ற முருகைக்கல் அகழ்வுகள் தீவுகளின் அமைவிடங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# யுத்தக் குற்றச்சாட்டுக்களை ஆராய விசாரணைக்குழு அமைக்க அரசு முடிவு

## ஐ.நா.வுடன் இணங்கிச் செல்லும் போக்கு

கொழும்பு)

புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான நீதி விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக விசேட விசாரணைக் குழுவொன்றை அமைப்பதற்கு அரசு தற்போது துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழு இலங்கை தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கை அரசு மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் ஏராளம் சுமத்தப்பட்டிருந்தது.

இதனால், இந்த அறிக்கைக்கு மிகவும் காத்திரமான பதில் ஒன்றை வழங்க வேண்டிய நிலையும், இராஜதந்திர ரீதியிலான அழுத்தமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஐ.நா.வின் செயலாளர் பான் கீ மூனுக்



கும் ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோஹணவுக்கும் இடையில் விரிவான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன.

இப்பேச்சுக்களின்போது பல விடயங்களில் இலங்கை அரசும் ஐ.நா செயலாளர் நாயமும் இணக்கம் கண்டுகொண்டனர்.

இதன் அடிப்படையிலேயே இலங்கை அரசு மேற்படி நீதி விசாரணைக் குழுவை அமைப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே இக்குழு அமைக்கப்படும் என் றும், ஏற்கனவே உள்ள நல்லிணக்க ஆணைக்குழுவுடன் இணைந்ததாக இக்குழு இயங்கும் என்றும் இவ் விடயத்தில் ஐ.நா.வுக்கு இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# கைத்தொலைபேசிகள் உடல் நலத்துக்கு கேடு

## விழித்துக்கொண்டது ஐரோப்பா

மொபைல் போன்கள், வயர் இல்லாத இன்டர்நெட் வசதியுடனான கம்ப்யூட்டர்கள் ஆகியவை மனித உடல்நலத்திற்கு பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியது என்பதால் பள்ளிகளில் அவற்றை பயன்படுத்த உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய கூட்டமைப்புக் கழகங்கள் நடத்திய ஆய்வில் இவைகளால் குழந்தைகளுக்கு பெரும் ஆபத்து விளையும் என தெரிய வந்துள்ளது. இத்தகவலை டெய்லி டெலிகிராப் நாளிதழ் வெளியிட்டுள்ளது.

புகைபிடித்தல், மது அருந்துதல் ஆகியவற்றை விட மொபைல் மற்றும் கணினியினால் பெரும் ஆபத்து ஏற்படக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பள்ளிகளில் இவற்றின் பயன்பாட்டிற்குத் தடைவிதிக்கவும் திட்டமிட்டுள்ளன. இருப்பினும் இதற்கு பல எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.